# சைவத்தமிழ் திருமணங்கள்

## ஓர் கையேடு



**குருபரன் - ஆரணி**

திருமணநாள் ஞாபகார்த்த வெளியீடு

**விஜய தை 28 உ**

10-02-2014

தொகுப்பு:

**பேராசிரியர் அ. குமாரவடிவேல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவத் தமிழ்த் திருமணங்கள்
## ஓர் கையேடு



குருபரன் – ஆரணி
திருமண ஞாபகார்த்த வெளியீடு
விஜய தை 28
10–02–2014

தொகுப்பு: பேராசிரியர் இ. குமாரவடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களின் திருமணச் சடங்கு: நடைமுறைகளும் சம்பிரதாயங்களும்

திரு, மணம் என்ற சொற்கள் முறையே தெய்வீகம், ஒன்றுசேர்தல் எனப் பொருள்படுதலால், திருமணம் தெய்வீக ஒன்று சேர்தல் எனப் பொருள்படும்.

ஜாதகப் பொருத்தம், மனப் பொருத்தம் போன்ற வேறுபட்ட பல முன்னெடுத்தல்களைத் தொடர்ந்து மணமக்களின் பெற்றோர் மணமக்களின் ஒப்புதலுடன் மணமக்களை இல்லற வாழ்வில் இணைக்க நிச்சயிக்கின்றனர். திருமணவைபவத்தின் அதியுச்ச நிகழ்வு உற்றார், உறவினர், அறவோர், பெரியோர், நண்பர்கள் முன்னிலையில் சுபநல் வேளையில் மணமக்கள் கைத்தலம் பற்றி மணமகன் மணமகள் கழுத்தில் தாலி என அழைக்கப்படும் மங்கலத் திருநாண் கட்டுதலாகும். இது திருமாங்கல்யதாரணம் எனப்படும்.

மங்கலத் திருநாண் பூட்டும் நிகழ்வுக்கு முன்பும் பின்பும் பல சடங்குகள் சம்பிரதாயப்படி நிகழும். திருமணம் நிகழும் ஒவ்வொரு இல்லத்திலும் திருமண நடைமுறைகளும் சம்பிரதாயங்களும் பேசுபொரு ளாயமையும். அனுபவம் மிக்க முதியோர் அவற்றைத் தம் இளஞ்சந்த தியினருக்குக் கூறி வைப்பர். இவை நாளடைவில் காற்றோடு போய்விடு வதுமுண்டு. பிறழ்வடைதலும் உண்டு. பிரதேச வேறுபாடடைவது முண்டு. இச்சிறு வெளியீட்டில் யாழ்ப்பாணத்து சைவப் பெருமக்கள் பின்பற்றிவரும் நடைமுறைகளைத் தொகுத்துத் தருகிறோம்.

**பொன்னுருக்கலும் கன்னிக்கால் அல்லது முகூர்த்தக்கால் நடுதலும்:**

பொன்னுருக்கல் மங்கலத் திருநாண் (தாலி) செய்வதற்கு வேண்டிய பொன்னை உருக்கும் நிகழ்வாகும். இவ்வைபவம் திருமணநாளிற்கு சில தினங்களுக்கு முன் அமையக்கூடிய சுபநாளில் சுபவேளையில் (ஏறத்தாழ ஒரு வாரத்திற்கு முன்னர்) மணமகன் இல்லத்தில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வைபவத்திற்கு மணமகளின் குடும்பத்தினரும் (மணமகள் நீங்கலாக) மணமக்களின் நெருங்கிய உறவினர், நண்பர்களும் அழைக்கப்பட்டு பங்குபற்றுவர். மணமகள் வீட்டார் இனிப்புப் பண்டமொன்றை (பெரும் பாலும் கொழுக்கட்டை) மணமகன் வீட்டிற்கு எடுத்துச்செல்வது சம்பிரதாயம்.

சில தினங்களுக்கு முன்னதாக நன்னாளில் மணமகனும் பெற் றோரும் பொற்காசு ஒன்றைப் பெற்று அதனை கோவிலில் பூசையில் வைத்தெடுத்த பின் தமது வீட்டு வழிபாட்டறையில் வைத்திருப்பர். பொன்னுருக்குவதற்கு ஆசாரியார் ஒருவரையும் ஏற்பாடு செய்திருப்பர். பொன்னுருக்கு நாளன்று மணமகனின் வீட்டு முகப்பில் மாக்கோலம் இடப்பட்டு நிறைகுட வரிசை வைக்கப்படும். இங்கும் இனிமேலும் நிறைகுட வரிசை என நாம் குறிப்பிடுவது பின்வரும் ஏற்பாட்டைக் குறிக்கும்:

**நிறைகுடவரிசை:** நாற்காலியொன்றில் கம்பளம் (மேசை விரிப்பு) விரிக்கப்பட்டு அதன் மேல் வாழையிலையொன்றை வடக்கு அல்லது கிழக்குத் திசையில் அதன் நுனி இருக்கக் கூடியதாக வைத்து அதன் மேல் நெல் பரப்பி அதன் மேல் நிறைகுடம் வைத்து, அதன் இரு மருங்கும் ஒவ்வொரு குத்துவிளக்கு ஏற்றிவைக் கப்படும். பசுவின் சாணம் அல்லது மஞ்சள்மாவும் அறுகும் கொண்டு உருவாக்கப்பட்ட விநாயகர் திருவுரு வொன்று நிறைகுடத்திற்கு வலது பக்கமாக வைக்கப்படும். விபூதி, சந்தணம், குங்குமம், பன்னீர்ச்செம்பு, வெற்றிலை, பாக்கு, ஒரு சீப்பு வாழைப்பழம் கொண்ட தாம்பாளம், பூத்தட்டம் ஆகியவையும் மங்கல நிகழ்வின் அடையாளமாகவும் பங்குகொள்ள வருவோரை வரவேற்கும் பாங்கிலும் வைக்கப்படும்.

**நிறைகுடம்:** நீர் நிரப்பிய குடமொன்றின் வாயிலில் பரவப்பட்ட ஒற்றை இலக்கமுடைய (3,5,7,9,..) மாவிலைகளுள் தும்பு நீக்கப்பட்ட முடியுள்ள தேங்காய் ஒன்றை வைத்து அத்தேங்காயைச் சந்தணம், குங்குமம், பூக்களால் (பூச்சரம் / பூமாலை) அலங்கரித்த அமைப்பு நிறைகுடம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுருக்கும் வைபவத்திற்குத் தேவையான பொருட்கள் இணைப்பு -2 இல் தரப்பட்டுள்ளது. பொன்னுருக்கும் சுபவேளையில் மணமகன் பொற்காசைத் தமது பெற்றோரிடமிருந்து பெற்று ஆசாரியாரிடம் கொடுப்பார். ஆசாரியார் வாழையிலையில் கும்பம் வைத்து, தேங்காய் உடைத்து விநாயகருக்கும் பொற்காசிற்கும் தூப, தீபம் காட்டி வழிபட்டபின் பொற்காசை உருக்குவார். பொன்னுருக்கிய பின், தாய் மாமன் தேங்காய் உடைத்துப் பெறப்படும் இளநீரால் தீயைத் தணிப்பார். (தாய் மாமன் இல்லாதவிடத்து தந்தைவழி மாமன் ஒருவர் தேங்காய் உடைப்பார்). தேங்காய் உடைக்கும் போது உடைப்பவர் தலைப்பாகை அணிந்திருத்தல் வேண்டும்.

வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், மஞ்சள், தேசிக்காய், பூக்கள் கொண்ட தட்டமொன்றில் உருக்கிய பொன் வெற்றிலையில் வைக்கப்பட்டு ஆசாரியாரால் மணமகனிடம் கையளிக்கப்படும். மணமகன் அதனை அங்கு கூடியுள்ள அனைவருக்கும் காட்டியபின் உருக்கிய பொன்னை மாங்கல்யம் செய்வதற்கு மீண்டும் ஆசாரியாரிடம் கையளிப்பார். அத்துடன் அவருக்கு அரிசி காய்கறியும் தெட்சனையும் வழங்கப்படும்.

தாலியில் சிவலிங்கம், விநாயகர் அல்லது இலட்சுமியினுடைய திருவுருவம் பொறிக்கப்பட வேண்டும். தாலி ஒரு பவுணும் அதனிருபக்கமும் கோர்த்திருக்கும் தங்க நாணயங்கள் ஒவ்வொன்றும் அரைப் பவுணும் உடைய தங்கத்திற் செய்யப்படும். இந்நாணயங்களில் ஒன்றில் விநாயகர் திருவுருவமும் மற்றையதில் இலட்சுமியினுடைய திருவுருவமும் பொறிக்கலாம். தாலியும் தங்கநாணயங்களும் மஞ்சட் கயிற்றிற் கோர்த்துக் கட்டப்படுவதே முறை. இந்நாட்களில் தாலியைப் பொன்னால் செய்த தாலிக்கொடியில் கோர்த்துப் பூட்டுவது வழக்கமாகி விட்டது. தாலிக்கொடி செய்வதாயின் அது 3,5,7,9..... போன்ற ஒற்றை எண் வரக்கூடிய அளவு பவுணில் செய்யப்பட வேண்டும்.

முற்காலத்தில் திருமணங்கள் மணமகள் இல்லத்திலே அமைக்கப் படும் பெரிய அலங்காரப் பந்தல்களிலேயே நடைபெற்றன. இதற்காகவும் வருகையாளர்கள் அமருவதற்காகவும் உபசரிக்கப்படுவதற்காகவும் மண மக்கள் வீடுகளின் முன்பாக பெரிய தற்காலிக பந்தல்கள் அமைக்கப் பட்டன. இப்பந்தல்கள் அமைப்பதற்கான நாள் வேலையும் பொன்னுருக்கு நடக்கும் அதே நாளிலேயே நடைபெறும். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலின் முதற்கால் பந்தலின் வடகிழக்கு (ஈசான) மூலையில் நாட்டப்படும். இது கன்னிக்கால் அல்லது முகூர்த்தக்கால் எனப்படும். மணமகனினதும் மணமகளினதும் வீடுகளில் முகூர்த்தக்கால் நடப்படும்.

பொன்னுருக்கல் நாளே திருமணச் சடங்கின் ஆரம்பநாள் ஆகையின் திருமணச்சடங்கின் நினைவாக மரக்கிளை ஒன்று மணமக்கள் இருவரது வீட்டு வளவுகளிலும் நாட்டப்படும். இம்மரங்கள் நன்கு வேரூன்றி கிளை பரப்பி நிழல் தர வேண்டுமெனப் பிரார்த்திக்கப்படும். இந்நிகழ்வு வாழ்வின் செழிப்பிற்கு மரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவும் சுபநிகழ்வுகளின் ஞாபகமாக மரம் நாட்டும் வழமை காலாதிகாலமாக எம்மவரிடம் இருந்து வருவதையும் காட்டுகிறது. கோடைகாலமாயினும் சரி மாரிகாலமாயினும் சரி இலகுவாக வளரக் கூடிய மரக்கிளை முள்முருங்கைக் கிளை என்பதாலும் மரக்கிளை நன்கு வேர்விட்டு வளரவேண்டுமென்பதாலும் முள்முருங்கைக் கிளை மரம் நாட்டலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. (இன்று முள்முருங்கை மரத்தை ஒருவித நோய் பீடித்துள்ளதால் அது செழித்து வளர்வதில்லை. ஆகவே பயன்தரு மரமொன்றை நாட்டுவதே பொருத்தமானது).

இப்போ இவை பிறழ்வடைந்து, முள்முருங்கைத்தடி நடும் சடங்கு தான் கன்னிக்கால் நடும் சடங்கு என அழைக்கப்படுகிறது. கன்னிக்கால் (அல்லது முகூர்த்தக்கால்) நடும் சடங்கு என்பது முள்முருங்கைத்தடி நடும் சடங்கல்ல. கன்னிக்கால் நடும் சடங்கு வேறு. மரக்கிளையொன்று நடும் சடங்கு வேறு.

திருமணப் பந்தல் போடுவதாகவிருந்தால், மணமகன் வீட்டில் பொன்னுருக்கல் தினத்தன்றே முகூர்த்தக்கால் நடப்பட வேண்டும். நீண்ட மூங்கில் தடி அல்லது பனை மரத்தைக் கழுவி விபூதி சந்தணம், குங்குமம் பூசி மாவிலையும் பட்டும் கட்டியபின் வருகை தந்த பெரியோர்களுள் ஒருவர் அதனைத் தூக்கி கிடங்கில் நிமிர்த்தி குழியை மூடவேண்டும். இவ்வாறு பந்தற்கால் நடும்போது பெரியவர் ஒருவர் கர்ப்பூரம் கொழுத்தி தேங்காய் உடைக்க வேண்டும். (அதன்பின் வேலையாட்கள் பந்தல் வேலையை ஆரம்பிக்கலாம்).

இக்காலத்தில் திருமணங்கள் வாடகைக்குப் பெறப்படும் திருமண மண்டபங்களிலேயே பெரும்பாலும் நடைபெறுகின்றன. இருப்பினும் சுபநாளில் சுப நேரத்தில் பந்தற்கால் நடும் வைபவம் சிலவிடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயத்திற்காக நடைபெறுகிறது. இது சரியல்ல. ஏனெனில் பந்தற்கால் நட்டுவிட்டு பந்தல் போடாது விடுவது முடிவுபெறாத கருமமாக அமையும்.

பந்தற்கால் நடவேண்டிய தேவை இருப்பின் அதை நட்டபின் மணமகன் வீட்டு வளவில் பொருத்தமானதோர் இடத்தில் முள் முருங்கைத்தடியொன்று ஊன்றப்படும். (அல்லது பயன்தருமரக்கன்றை நடலாம்). தடியின் (அல்லது மரக்கன்றின்) மேல்பக்கத்தே ஐந்து மாவிலைகள் மஞ்சள் நனைத்த கயிற்றால் அல்லது பட்டுத் துண்டால் சுற்றிக் கட்டப்படும். நடுப்பகுதியில் மஞ்சள் நீரில் தோய்த்தெடுக்கப்பட்ட செப்புக்காசொன்று கட்டப்பட்ட வெள்ளை நிறத்துணியொன்று கட்டப் படும். மணமகனின் மூத்த உறவினர் ஒருவர் இத்தடியை ஊன்றி (மரக்கன்றை நாட்டி) விபூதி சந்தணம் சாத்துவார். மூன்று சுமங்கலிகள் நவதானியம், பால், நீர் இவற்றை தடியின் (மரக்கன்றின்) அடியில் சேர்ப்பிப்பர். பெரியவர் ஒருவர் தேங்காய் உடைத்து, சாம்பிராணி கர்ப்பூரதீபம் காட்டி தடி (மரக்கன்று) நன்கு வேரூன்றி வளர வேண்டுமெனப் பிரார்த்திப்பார். இவை முடிவுற்றதும் மணமகன் வீட்டில் அனைவரும் விருந்துண்பர். அதன் பின்னர் மணமகன் தவிர்ந்த மணமகனின் பெற்றோர் மற்றும் உறவினர்களும் (மொத்த எண்ணிக்கை ஒற்றைப்பட இருத்தல் வேண்டும்) மணமகள் வீட்டிலிருந்து வந்தவர்களும் மணமகள் வீடு சென்று அங்கும் மணமகன் வீட்டில் நடந்தது போல் (பந்தல் போடுவதாயின் பந்தற்கால் நாட்டி) முள்முருங்கைத்தடி (மரக்கன்று) நடுவர். முள்முருங்கைத்தடி /மரக்கன்று நட்டபின் மணமகள் வீட்டில் விருந்து பசாரம் நடக்கும்.

பொன்னுருக்கல் தினத்தன்றே மணமக்கள் வீடுகளில் பலகாரங்கள் செய்வது தொடங்கும். பொன்னுருக்கல் நாளே திருமணச் சடங்கின் ஆரம்பநாள் ஆதலின் திருமணம் மங்கலகரமாயமையவும் தடங்கல்கள் ஏற்படாதிருக்கவும் சில வரையறைகள் ஏற்படுத்தப்பட்டன:

(அ) பொன்னுருக்கியபின் திருமணநாள் வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாது என்றொரு வழமையுள்ளதாகக் கூறுவர். இது தட்டுத்தவறி மணமக்களிடையே மனக்குழப்பம் எதுவும் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கமுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) திருமணநாள் வரை பெண்ணும் மாப்பிள்ளையும் தத்தமது வீட்டைவிட்டு எங்கும் செல்லக்கூடாதென்ற சம்பிரதாயக் கட்டுப்பாடும் உண்டு. இது அவர்களின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடாகும்.

(இ) பொன்னுருக்கியபின், இரு பகுதி வீட்டாரும் அசுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளக் கூடாது.

**முளைப் பாலிகை (முளைப் பாத்திரம்)**

பாலிகை என்றால் மட்பாத்திரம். மட்பாத்திரங்களில் தானியங் களை முளைவர விடுதல் முளைப்பாலிகை எனப்படும். மூன்று அல்லது ஐந்து சுமங்கலிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மட்பாத்திரத்தில் ஈரமண் நிரப்பி நனைத்த நவதானிய விதைகளை பாத்திரத்து மண் மேல் தூவி நீரையும் பாலையும் மும்முறை தெளித்து அவற்றை மணமகள் வீட்டு வழிபாட்டறையில் வைப்பார்கள். இது (பொன்னுருக்கல் தினத்தன்று) மணமகள் வீட்டில் பந்தற்கால் நாட்டிய கையோடு அல்லது மணநாளுக்கு மூன்று அல்லது ஐந்து நாள் முன்னதாகச் செய்யப்படும். தானிய விதைகள் மணநாளன்று முளைவிட்டிருக்கும். அம்முளைப்பாலிகைகள் மணமண்ட பத்திற்கு மணநாளன்று மணமகள் செல்லும்போது எடுத்துச் செல்லப் படும். நவதானியங்கள் முளைவிட்டுள்ளது போல் மணமக்களும் அவர் தம் குடும்பமும் செழித்து வளரும் என்பதை உணர்த்துவதாக முளைப்பாலிகை இடும் வைபவம் அமைகிறது.

இக்காலத்தில் சிலவிடங்களில் மணநாளன்றே மணமண்டபத்தில் முளைப்பாலிகை இடப்படுகிறது. நவதானியம் என்பது நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உழுந்து, கடலை ஆகிய ஒன்பது (நவ) தானியங்கள்.

**வீட்டு / மண்டப அலங்காரங்கள்:**

முன்னர் குறிப்பிட்டபடி, முன்னாளில் திருமணங்கள் மணமகள் இல்லத்திலேயே நடைபெற்றன. அதற்காக மரங்களாலும் தென்னோ லைக்கிடுகுகளாலும் பந்தல்கள் போடப்பட்டு பந்தலின் உட்பகுதியில் வெள்ளை கட்டப்படும். வெள்ளை கட்டுவது அழகுக்காகவும் கூரையி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து தூசி, பல்லி எச்சம், பூச்சிகள் விழாதிருப்பதற்குமாகும். மரக்கால்களை அழகு படுத்த அவற்றின் மேல் துணி சுற்றி மறைக்கப்படும். போதிய பொருள் வசதி படைத்தோர் வேலைப்பாடுகள் கொண்ட சொக்கட்டான் பந்தல் போன்றவற்றை அமைப்பர். பந்தல் கமுகு, வாழை, தென்னோலைகள் கட்டி அலங்கரிக்கப்படும். கமுகு கொத்துக் கொத்தாய் காய்ப்பதால் அது மங்கலப் பொருளாகக் கருதப்படுகிறது. வாழை ஒரு தடவையே குலை போடுவது ஒருமுறையே திருமணம் என்பதை ஞாபகப் படுத்துவதாகவும் வாழையடி வாழையாக வாழை செழித்து வளர்வது போல எமது சந்ததியும் செழித்து வளருதற்கான நற்சகுனமாகவும் வாழை மரங்கள் நோக்கப்படும். தென்னை நூறாண்டு வாழக்கூடியது. இதன் காரணமாகவே வாழையும் தென்னோலையும் கமுகோலையும் மண்டபங்களை அலங்கரிக்கும் மங்களப்பொருட்களாகின. சுற்றிப் படரும் வெற்றிலையின் நுனியில் இலட்சுமி வாசஞ்செய்வதாகக் கொள்ளப்படுகிறது. இதனாலேயே எவரும் வெற்றிலையை யாருக்காவது கொடுக்கும் போது அதன் நுனி கொடுப்பவரை நோக்கி இருக்க வேண்டுமெனக் கூறுவர். இக்காரணங்களாலேயே வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய் ஆகியன அர்ச்சனைக்கும் மங்களகாரியங்களுக்கும் ஏற்ற பொருட்களாகின.

கல்யாணமண்டப நுழைவாயிலின் இரு மருங்கிலும், மணமக்களது வீட்டு நுழைவாயில்களின் இருமருங்கிலும் பழுத்த குலைகளையுடைய வாழைமரங்கள் கட்டுவதும் மாவிலை தோரணங்களால் அலங்கரிப்பதும் இந்நுழைவாயில்களில் நிறைகுட வரிசைவைக்கப் படுவதும் விருந்தினரை வரவேற்பதற்கும் மங்கல நிகழ்வைக் குறிப்பதற்குமான இன்றியமையாத அம்சங்களாகப் பின்பற்றப்படுகிறது. (மாவிலை தோரணங்கள் சுப நிகழ்ச்சிக்கு ஒரு விதமாகவும் அசுப நிகழ்வுகளுக்கு வேறு விதமாகவும் கட்டப்படும். விரிவஞ்சி விடுத்தனம். கேட்டு அறிந்து கொள்க). மண மண்டபத்தின் நன்கு அலங்கரிக்கப்பட்ட மணமேடையில் மணமக்கள் இருக்கும் அலங்கரித்த ஆசனம் கிழக்கு நோக்கியிருத்தல் வேண்டும். மணமண்டபத்தில் படத்தில் காட்டிய ஒழுங்கில் திருமணக் கிரியைக்குரிய சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. மணமக்கள் இருக்கை.
2. சிவாச்சாரியார் இருக்கை
3. மஞ்சள் மா அல்லது பசுவின் சாணத்தினாலும் அறுகம்புல்லினாலும் அமைக்கப்பட்ட விநாயகர் திருவுரு
4. ஓம குண்டமும் புண்ணியாகவாசனக் கும்பமும்
5. அரசாணி
6. அரசாணியின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு கும்பமும் குத்து விளக்கும்
7. சந்திர கும்பம் (வடமேற்கு மூலையில் மேற்கு நோக்கி)
8. முளைப்பாலிகைகள் (சந்திர கும்பத்திற்கு முன்பு கிழக்கு நோக்கி)
9. அம்மி
10. சிவபார்வதி கும்பங்கள் (வடகிழக்கு (ஈசான) மூலையில்) மேற்கே பார்த்த வண்ணம்
11. நவக்கிரக கும்பங்கள் (தென் கிழக்கு (அக்னி) மூலையில்)
12. கணையாழி எடுத்தற்கு மஞ்சள் கலந்த நீரைக் கொண்ட பானை

சைவசமய முறைப்படி, மணமேடையையும் மணமக்கள் மற்றும் அவர்தம் பெற்றோரையும் சுத்திகரிக்கும் வருணபகவானும், சந்திரன், சிவன்-பார்வதி, நவக்கிரகங்கள் ஆகியோரும் கும்பங்களில் எழுந்தருளச் செய்யப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணப்பெண் திருமண மண்டபம் செல்லல்:**

முன்னாட்களில் திருமணங்கள் மணமகள் இல்லத்திலேயே நடைபெற்றன. இந்நாட்களில் திருமணம் மண்டபங்களில் நடைபெறுவதால், திருமணமண்டபமே மணமகள் இல்லமாகக் கொள்ளப்படவேண்டும். ஆகவே மணநாளன்று மணமகன் திருமணமண்டபத்திற்கு வருமுன்பே, மணமகள் திருமணமண்டபத்திற்கு வந்து அறையொன்றில் தங்கியிருத்தல் முறை.

திருமணநாளன்று, மணப்பெண் தனது இரு கரங்களிலும் சுருட்டிய வெற்றிலைக்குள் நாணயக் குற்றிகளை வைத்துக் கொண்டு மரப் பலகையொன்றில் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்க மூன்று பெரியவர்கள் அவளது தலையில் பாலறுகு (பசுப்பாலும் அறுகம்புல்லும் நாணயக் குற்றிகளும்) வைப்பார்கள். அதன்பின் அவள் நீராடி விட்டு வர, மணமகளாக அலங்கரிக்கப்பட்டு மணவறைக்கு அழைத்துச் செல்லப்பட ஆயத்தமாவாள். அவளது முகம் மெல்லிய முகத்திரையால் மறைக்கப் பட்டிருக்கும்.

முற்காலத்தில் மணமகள் கழுத்தில் திருமங்கலநாண் கட்டப்படும் வரை மணமகள் மணமகனைப் பார்ப்பதில்லை. ஆகவே முகத்திரை அணிந்து மணமேடைக்கு அழைத்து வரப்படுவாள். ஏனையோரது கண்திருஷ்டி (கண்ணூறு) படாதிருக்கவும் முகத்திரை உதவும். (திருமங்கலநாண் பூட்டுமுன் மணமகள் தனது முகத்திரையை அகற்றித் தனது கணவனைப் பார்ப்பாள்). வீட்டு முகப்பில் ஆரத்தி எடுக்கப்பட்டபின் மணமகள் உறவினர் புடைசூழ அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் திருமணமண்டபத்தில் அமைந்துள்ள மணமகள் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்கவைக்கப்படுவாள். மணமகளுடன் வருவோர் சில தினங்களுக்கு முன்னர் மணமகள் வீட்டில் முளையிடப்பட்ட முளைப்பாலிகைகளை எடுத்துவருவர். ஆரத்தி கெட்ட கண்கள் பார்வையால் ஏற்படக்கூடிய விளைவுகளிலிருந்து (கண் திருஷ்டியிலிருந்து) பாதுகாப்பதற்காகச் செய்யப்படுவது.

**ஆரத்தி :** மஞ்சளும் குங்குமமும் பரப்பி நாணயக்குற்றியொன்றும் வைத்த தட்டமொன்றில் நெய் தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலஞ்சுழியாக மூன்று முறை சுற்றித் தீபத்தை அணைத்து வரவேற்கப்படுபவரின் / வரவேற்கப் படுபவர்களின் நெற்றியில் அக்குங்குமத்தால் திலகமிடல் ஆரத்தி எடுத்தல் எனப்படும். தட்டம் பழுதுறாதிருக்க மூன்று வாழைப்பழத் துண்டுகளைத் தட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து நெய் தீபத்தை அதன் மேல் வைப்பது வழக்கிலுள்ளது. அது அவசியமல்ல.

திருமணமண்டபத்திற்குச் செல்லும் வழியில் மணமகளின் குலதெய்வத்தின் கோவிலில் தேங்காய் உடைத்து கர்ப்பூரம் கொழுத்தி வணங்கி விட்டுச் செல்வர்.

**மாப்பிள்ளை அழைப்பு:**

மாப்பிள்ளையை திருமணமண்டபத்திற்கு அழைத்துச்செல்ல மணப்பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளைத் தோழனும் உறவினர்களும் திருமணநாளன்று வருவர். மாப்பிள்ளைத் தோழன் மணப்பெண்ணின் மணமாகாத சகோதரனாக அல்லது ஆண் உறவினராக இருப்பார். பெண்வீட்டார் மாப்பிள்ளை அழைக்க வரும்போது வாழைப்பழம், பலகார வகைகள், மூன்று தேங்காய் ஆகியவற்றை மூன்று வெவ்வேறு தட்டங்களில் வெள்ளைத்துணியால் மூடி எடுத்துவருவர். அவர்கள் வருகைதந்ததன்பின் மணமகன் தனது இரு கரங்களிலும் சுருட்டிய வெற்றிலைக்குள் நாணயக் குற்றிகளை வைத்துக் கொண்டு மரப் பலகையொன்றில் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்க அவரது தலை மெல்லிய வெள்ளைத் துணியால் போர்க்கப்படும். அவர் முன்னால் நிறைகுடம், குத்துவிளக்கு, வெற்றிலை பாக்கு, பழம் வைக்கப்படும். மணமகன், மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு தம்பதிகள் மணமகனின் தலையில் வெள்ளைத் துணிக்குமேல் மூன்று தடவை பாலறுகு (பசுப்பாலும் அறுகம்புல்லும் நாணயக் குற்றிகளும்) வைப்பார்கள். அப்போது தாய்மாமன் வடக்கு நோக்கியிருந்து தேங்காய் உடைப்பார். பாலறுகு வைத்ததன்பின் மணமகன் நீராடி விட்டு வந்து மணமகனுக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டு வழிபாட்டறையில் இறைவனைப் பிரார்த்தித்தபின் தனது பெற்றோர்களைச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி அவர்களது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்.

மாப்பிள்ளை அழைப்பிற்கு வருகைதந்தவர்களுக்கு காலை உணவு பரிமாறப்படும். (மணமகன் காலை உணவருந்தமாட்டார்). விருந்தினர் உபசரிப்பு முடிந்த பின்னர் மணமகனை கிழக்கு நோக்கி இருக்க வைத்து பெரியவர் ஒருவரால் மணமகனுக்குக் கடுக்கன் பூட்டித் தலைப்பாகையும் உத்தரீயமும் (சால்வை) அணிவிக்கப்படும். தாய் மாமன் (தாய் மாமன் இல்லாதவிடத்து தந்தை வழி மாமன்) கடுக்கன் பூட்டி தலைப்பாகை அணிவிப்பார். மாப்பிள்ளையின் தந்தை அல்லது உறவினரொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை சூட்டுவார். சால்வை இடத்தோளில் இடப்பட்டு வலப்பக்க இடுப்பிற்குச் சமீபமாக முடிச்சிடப்படும். அவ்வாறே தலைப்பாகையும் உத்தரீயமும் மாப்பிள்ளைத் தோழனுக்கும் அணிவிக்கப்படும். தோழன் மாப்பிள்ளையின் இடப்பக்கத்தே நிற்றல் வேண்டும். இக்காலத்தே கடுக்கண் பூட்டல் நடைமுறையிலில்லை.

தலைப்பாகை வைத்தபின் மணமகன் தோழனாலும் மணமகள் வீட்டிலிருந்து வந்தோராலும் மணமகனின் உறவினராலும் திருமண மண்டபத்திற்கு அலங்கரித்த வாகனமொன்றில் அழைத்துச் செல்லப் படுவார். வீட்டு வாசலில் இரு சுமங்கலிப் பெண்களால் ஆரத்தி எடுக்கப்படும்.

**மணமகனுடன் பின்வருவன எடுத்துச் செல்லப்படும்:**

(அ) மணமகளுக்குத் தோழியாக இருக்கவுள்ளவர் கூறைச்சேலைத் தட்டத்தை எடுத்துச் செல்வார். மணமகனின் விவாகமான சகோதரி அல்லது விவாகமான உறவுப்பெண்ணொருவரே தோழியாக விளங்க வேண்டும். கூறைச்சேலைத் தட்டம் பின்வருமாறு அமையும்: தட்டமொன்றில் பச்சையரிசி பரவி அதன் மேல் கூறைச் சேலை, சட்டை, கொண்டை மாலை, தாலி, தாலி கோர்த்தற்கான மஞ்சள் கயிறு அல்லது தாலிக்கொடி அல்லது அவையிரண்டும், ஒரு சோடி மெட்டி (கால் விரலுக்கு அணியும் வெள்ளி வளையம்), ஐந்து வெற்றிலை, மூன்று முழுப்பாக்கு, கஸ்தூரி மஞ்சள், குங்குமம், தேசிக்காய் ஒன்று, தேங்காய் ஒன்று, ஒரு சீப்பு வாழைப்பழம், பூக்கள், சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசனைத் திரவியம் போன்ற அழகு சாதனப் பொருட்கள் ஆகியன வைக்கப்படல் வேண்டும். தாலி கோர்த்தற்கான மஞ்சட்கயிறு ஒன்பது இழைகளால் ஆக்கப் பட்டதாயிருத்தல் வேண்டும். அவ்விழைகள் வாழ்க்கையைப் புரிந்துகொள்ளல், உயர்வு, ஆற்றல், தூய்மை, தெய்வீக நோக்கு, உத்தம குணங்கள், விவேகம், தன்னடக்கம், தொண்டு ஆகியவற் றைக் குறிக்கும்.

(ஆ) கூறைச்சேலைத் தட்டம் உட்பட ஒற்றை இலக்கமுடைய (3 அல்லது 5) தட்டங்களில் சுமங்கலிப் பெண்கள் பின்வரும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்: மூன்று தட்டம் கொண்டு செல்வதா யின் ஒரு தட்டில் முடியுடன் கூடிய மஞ்சள் பூசிய மூன்று தேங்காய் களும் இன்னொரு தட்டில் 3 அல்லது 5 பலகாரங்கள் வைத்தும் கொண்டு செல்வர். ஐந்து தட்டமாயின் மற்றிரு தட்டங்களில் பூக்கள், பழங்கள் கொண்டு செல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாகக் கொண்டு செல்லப்படும் மூன்று பலகாரங்கள்: சீனி அரியதரம், பயற்றம் பணியாரம், வெள்ளை றொட்டி.

திருமணமண்டபத்திற்குச் செல்லும் வழியில் மணமகனின் குலதெய் வத்தின் கோவிலில் தேங்காய் உடைத்து கர்ப்பூரம் கொழுத்தி வணங்கி விட்டுச் செல்வர். மணமகன் மணமண்டபத்தை அடையும்போது மங்கள வாத்தியம் முழங்க பெண் வீட்டார் வரவேற்பர். மண்டப வாயிலில் மண மகனின் கால்களை மணமகனின் தோழன் அலம்பி விடுவார். மணமகன் பதிலுக்கு தோழனை மோதிரம் அணிவித்து மகிழ்விப்பார். மணமகளின் தந்தையார் மணமகனை மாலையிட்டு வரவேற்பார். இரு சுமங்கலிகள் ஆரத்தி எடுத்த பின் மாப்பிள்ளைத்தோழன் மணமகனை மணவறைக்கு அழைத்துச் செல்வார்.

## திருமணக் கிரியைகள்

### குறிக்கோள் பகர்தலும் சுத்திகரித்தலும் (சங்கற்பித்தலும் புண்ணியாக வாசனமும் ):

மணவறையில் மணமக்கள் இருக்கை மீது நெல் பரவி அதன் மேல் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கும். மணமகனும் மணமகனுக்கு இடப் பக்கத்தில் மாப்பிள்ளைத் தோழனும் இருக்கையில் அமர்வர். திருமண த்தை நடாத்தி வைக்கும் சிவாச்சாரியார் மணவறையின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியிருந்து கிரியைகளை ஆரம்பிப்பார். மணமகனுக்கு கை அலம்ப நீர் கொடுத்தபின் விபூதி கொடுத்து அணியச் சொல்வார். பின் பவித்திரத்தை (தர்ப்பைப் புல்லில் செய்யப்பட்ட மோதிரத்தை) வலது மோதிரவிரலில் அணியச் செய்வித்து திருமணம் செய்யச் சங்கற்பம் செய்து வைப்பார். சங்கற்பம் என்பது, தான் ஆரம்பிக்கும் கருமத்தின் குறிக்கோளைக் கூறி அதனைச் செய்து முடிக்க உறுதி பூணலை வெளிப்படுத்துதலாகும். இதன் பின் சிவாச்சாரியார் திருமணத்தை நடத்தி வைப்பதாக சுயசங்கற்பம் செய்து கொண்டபின் மஞ்சள் மாவும் அறுகும் கொண்டு உருவாக்கப்பட்ட விநாயகர் திருவுருவை வழிபட்டு எடுத்த காரியம் விக்கினங்களின்றி நிறைவுற விநாயகரது திருவருளை வேண்டிப் பிரார்த்திப்பார். அச்சமயம் பின்வரும் திருமுறைப் பாடல் ஓதத் தக்கது:

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினேஸ்வரர் வழிபாட்டின் பின் தீப ஒளியாக விளங்கும் மகாலட்சுமியைப் பிரார்த்தித்து வணங்குவார். பின் சம்பந்தப்பட்ட அனைவரதும் அகப்,புறச் சுத்திக்காகவும் மண்டபச் சுத்திக்காகவும் பஞ்ச கவ்விய பூசை செய்து (பஞ்சகவ்வியம்: பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) வருணபகவானையும் புண்ணிய நதிகளையும் பிரார்த்திக்கும் புண்ணியாகவாசன மந்திரங்களை ஓதி வழிபடுவர். அவ்வழிபாட்டின் பயனான பஞ்சகவ்வியத்தை மண்டபமெங்கும் புரோட்சித்து (தெளித்து) மண்டபத்தைச் சுத்திகரித்து மணமகனுக்கும் உறவினருக்கும் பருகுமாறு வழங்குவார். பின் கையை அலம்ப நீர் வழங்குவார்.

## சந்திரகும்ப பூசையும் முளைப்பாலிகையும் (அங்குரார்ப்பணம்)

பின் சிவாச்சாரியார் சந்திரகும்ப பூசை செய்வார். மூன்று சுமங் கலிகள் மணமகள் வீட்டிலிருந்து எடுத்துவரப்பட்ட முளைப்பாலி கைகளைச் சந்திர கும்பத்தின் முன் மேற்குப் பக்கமாக வைத்து அவற்றிற்கு நீர் தெளித்து வெற்றிலை, பழம் வைத்து புட்பம் சாத்தி கற்பூர ஆரத்தி செய்து வணங்குவர். பாலிகையில் இடப்பட்ட நவதானியங்கள் முளைத் துப் பயிராவது போல் மணமக்களது வாழ்க்கையும் செழித்து வளம்பெற வேண்டும் எனப் பிரார்த்திப்பதாகும். (முளைப்பாலிகை சூரியனையும் சந்திரகும்பம் சந்திரனையும் குறிக்கும்). சிலர் முளைப்பாலிகையிடலை மண்டபத்திலேயே செய்வர்.

## காப்புக்கட்டுதல் (இரட்சாபந்தனம்)

சடங்கின் போது எதுவித தடங்கலோ புனிதத்தைக் குறைக்கும் சம்பவங்களோ ஏற்படாது சடங்கு ஒழுங்காக நடைபெறப் பிரார்த்தித்து மணமகனின் வலது கை மணிக்கட்டில் சிவாச்சாரியாரால் காப்பு (புனித நூல்) கட்டப்படும். தட்டமொன்றில் பச்சையரிசி பரவி அதில் விபூதி, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காயுடன் தேங்காயின் மேல் காப்பை (புனித நூல்) வைத்து வழிபட்டபின் காப்புக் கட்டப்படும். காப்புக் கட்டும் போது மணமகனின் மாமன் முறையானவர் தேங்காய் உடைப்பார். அப்போது கெட்டி மேழம் முழங்க வேண்டும். கெட்டி மேழம் என்பது நாதஸ்வரத்தையும் தவிலையும் உரத்து வாசித்தலாகும். கெட்டி மேழம் முழங்குவதன் நோக்கம் தும்மல், அழுகை, பல்லி சப்தமிடல் போன்ற எந்தவொரு அபசகுன ஒலியும் காதிற் கேளா திருத்தற்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கும்ப பூசைகளும் எரியோம்பலும்**

இதன் பின்னர் சிவன்-பார்வதி கும்பங்கள், நவக்கிரக கும்பங்கள், அரசாணி கும்பங்கள் ஆகியவற்றிற்கு இறையருள் துணை நிற்கவும் கிரகதோக்ஷங்கள் அகலவும் பிரார்த்தித்து பூசை வழிபாடுகள் நடைபெற்று ஓமகுண்டத்தில் சிவாக்கினி வளர்க்கப்படும்.

அரசாணி பற்றி ஆகமப் பத்ததிகளில் கூறப்படவில்லை. அதனால் அது இடையிட்டு வந்த வழமை என்பர். அரசு சிவனையும் ஆல் விக்ஷ்ணுவையும் குறிக்குமென்றும் முற்காலத்தில் அரசையும் ஆலையும் பூசிப்பதற்காகப் பந்தலில் நடப்பட்டு அரசால் என அழைக்கப்பட்டு பின் மருவி அரசாணி ஆகியிருக்கக்கூடுமெனவும் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது சைவக் கிரியை விளக்கம் என்ற நூலில் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அரசு, ஆல் இவற்றின் கிளைகள் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்போது அவ்வழமை இலகுவில் இல்லாதொழிந்திருக்கமுடியாது. இங்கு தமிழகத்துப் புராதன கோவிற் கற்சிற்பங்கள் அனைத்திலும் சிவன் - பார்வதி கல்யாணக் காட்சிகளின் பின்புறத்தில் மரமொன்றும் செதுக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. ஆகவே, எது எவ்வாறாயினும் மனித வாழ்வுக்கு மரங்களின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக மரமொன்றின் காட்சிப் படுத்தல் அமைந்துள்ளது சிந்தனைக்குரியது.

பத்ததிகளில் இல்லையாயினும் தற்கால வழக்கில் அரசாணியை இந்திரசபையாகவும் நான்கு அரசாணிக் கும்பங்களை நால்வேதமாகவும் கருதியே பூசை செய்யப்படுகிறது. சபையில் இருக்கும் பெரியோர்களுடன் சூரியன் முளைப்பாலிகை வடிவத்திலும் சந்திரன் கும்ப வடிவத்திலும் சிவன்-பார்வதி கும்ப வடிவிலும் எப்பொருளையும் தூய்மைப்படுத்தும் அக்கினி வடிவிலும் வேதங்கள் அரசாணிக்கும்பங்கள் வடிவிலும் விசேடமாக எழுந்தருளியிருந்து திருமணத்திற்கு சாட்சியாக விளங்குவது போல் முப்பத்துமுக்கோடி தேவர்களின் தலைவனான (அரசனான) இந்திரனும் அரசாணியாக எழுந்தருளியிருந்து முப்பத்து முக்கோடி தேவர்களின் சாட்சியாக விளங்குகிறார் என்பதே பொருத்தமான விளக்கமாகும். தேவர்கள் வேதநெறி ஒழுகுபவர்களாதலின் வேதங்கள் அரசாணியைச் சுற்றி கும்ப வடிவில் உருவகப்படுத்தப்படுகின்றன.

இந்திரலோக அதிபதியான தேவர்கள்தலைவன் இந்திரன் அரசாணியின் நடுவில் முள்முருக்கு மரமாகக் காட்சிப்படுத்தப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் முளைப்பாலிகை வடிவத்திலும் சந்திரன் கும்ப வடிவத்திலும் சிவன்-பார்வதி கும்ப வடிவிலும் அக்கினி வடிவிலும் வேதங்கள் அரசாணிக்கும்பங்கள் வடிவிலும் காட்சியளிக்க இந்திரன் முள்முருங்கை மர வடிவில் காட்சிப்படுத்தப்படுவது ஏன் என்பது சிந்தனைக்குரியது. அதற்கான விளக்கம் இங்கு முன்வைக்கப்படுகிறது: இந்திரன் முள் முருங்கை மரமாக உருவகப்படுத்தப்படுவது எல்லோருக்கும் குறிப்பாக மணமகனுக்கு ஒழுக்கமான நடத்தையின் அவசியத்தை வலியுறுத்து வதாயமைகிறது. அம்மி மிதித்தலும் அருந்ததி காட்டலும் மணமகள் கற்புக்கரசியாக - பதிவிரதையாக - வாழ வேண்டியதைக் கோடிட்டுக் காட்டப் புகுத்தப்பட்ட சடங்குகள் (அவை பின்னே விபரிக்கப்பட்டு ள்ளன). அது போல மணமகன் ஒழுக்கநெறி பிறழாது வாழ வேண்டியதன் அவசியத்தையும் தவறின் அவன் கேலிக்குரியவனாகி வருந்துவான் என்பதையும் நினைவிற் கொள்ள வைக்கும் ஒரு சாதனமாகவே முள் முருங்கைத்தடிக்கு மணமண்டபத்தின் நடுப்பகுதியில் முக்கியமானதொரு இடம் வழங்கப்பட்டுள்ளது. தேவர்கள் தலைவனாம் தெய்வேந்திரன் கற்புக்கரசியாம் அகலிகையுடன் ஒழுக்கம் தவறி நடக்க முற்பட்டபோது தேவேந்திரனது உடம்பு முழுவதிலும் யோனி முளைப்பதாகட்டும் என அகலிகை சாபமிட்டாளென்பதும் அதனால் தேவேந்திரன் பட்ட அவஸ்தைக்கு அளவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. முள்முருங்கை மரக் கிளையில் நெருக்கமாக முளைக்கும் முட்கள் தேவேந்திரன் உடம்பில் முளைத்த யோனிகளுக்கு ஒப்பானவை. முள்முருங்கைத் தடியைப் பார்ப்போருக்கு ஒழுக்கம் தவறி நடக்க முயலின் தேவேந்திரன் பட்ட அவஸ்தையையே பட நேரிடும் என்பதை நினைவூட்டவே முட்கள் நிறைந்த முள்முருங்கைத் தடி காட்சிப்படுத்தப்படுகிறது. இவ்விளக்கத்தை பொன்னுருக்கும் நாளன்று மணமக்கள் வீடுகளில் முள்முருங்கைத்தடிகள் நடப்படுவதற்கான காரணமாக அல்லது நடுவதற்குரிய தடியை முடிவு செய்தலில் செல்வாக்குச் செலுத்திய காரணியாகவும் கருதலாம்.

அரசாணிக் கும்பங்கள் காட்சிப்படுத்தும் வேதநெறியை அரனாகக் கொண்டு புதுமணத் தம்பதிகள், முள்முருங்கை மரத்தில் முட்கள் இருப்பது போல இல்வாழ்வில் இடர்கள் ஏற்பட்டாலும் அவற்றிற்கு முகம்கொடுத்து முள்முருங்கைத்தடி வளையாது நேராக வளர்வது போல் இல்லற தர்மத்தை சற்றும் வழுவாது நேர் வழியில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதையும் முள்முருங்கை வைரமற்றிருப்பினும் வளையாது நேராக வளர்வது போல் இல்லற வாழ்வும் நெகிழ்சிப் பண்புடன் நேர் வழி செல்வதாயமைய வேண்டும் என்பதையும் தடி ஊன்றப்பட்டு முளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களில் சாதகமற்ற சீதோஷ்ண நிலையிலும் கூட வேர் விட்டுக் கிளை பரப்பும் தன்மை முள்முருங்கைத் தடிக்கு இருப்பதால் சாதகமற்ற வாழ்க்கைச்சூழலுக்கு உட்படவேண்டி ஏற்பட்டாலும் முயற்சியால் அவற்றை வெற்றிகொள்ளவேண்டும் ஆகிய பாடங்களைப் புகட்டும் வகையிலும் முள்முருங்கையை அரசாணிக் கும்பங்களின் நடுவே நாட்டும் வழமை ஏற்பட்டிருக்கலாம். நாட்டப்படும் முள்முருங்கை த்தடி கெட்டுகள் அற்ற வளைவில்லாத நேர்த்தடியாக இருக்க வேண்டு மென வலியுறுத்தப்படுவது நோக்கற்பாலது.

## மணமகளை மணவறைக்கு அழைத்து வரல்

மணமகனுக்குக் காப்புக் கட்டியபின், மணமகள் முகத்திரையிட்டு தோழிமார், விளக்கேந்திய நங்கையர், உறவினர் புடைசூழ மணமேடைக்கு அழைத்து வரப்படுவாள். மணவறையில் மணமகனுக்கு வலதுபுறத்தில் மணமகள் அமருதல் வேண்டும். சிவாச்சாரியார் மணமகனுக்குச் செய்தது போலவே மணமகளுக்கும் சங்கற்பித்து, பஞ்சகவ்வியம் பருகச்செய்து காப்புக்கட்டுவார். அப்போது மணமகளின் மாமன் முறையானவர் தேங்காய் உடைப்பார். கெட்டி மேழம் முழங்கும். மணமகள் பவித்தி ரத்தை இடது கை மோதிர விரலில் அணிவர். காப்பு இடது கை மணிக் கட்டில் கட்டப்படும்.

இது முதல் மணமகனும் மணமகளும் சிவன் - பார்வதியாகக் கருதப்படுவர்.

## பிதுரர் ஆசீர்வாதம்

மணமகளுக்குக் காப்புக்கட்டியபின், மணமகனின் பெற்றோர் மணமகனின் இடப்பக்கத்திலும் மணமகளின் பெற்றோர் மணமகளின் வலப்பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். சிவாச்சாரியார் இவர்களுக்கு விபூதி வழங்கிப் பவித்திரம் அணிவித்து சங்கற்பம் செய்து வைப்பார்.

குறிப்பு: மணமகனின் தந்தை அமரத்துவமடைந்திருப்பின் மணமகனின் மணமுடித்த தமையன் தந்தை ஸ்தானத்திலிருந்து செயற்படுவர். அவ்வாறே மணமகளின் தந்தை அமரத்துவமடைந்திருப்பின் அவரது மணமுடித்த தமையன் தந்தை ஸ்தானத்திலிருந்து செயற்படுவர்.

இல்வாழ்வு இனிதாக அமைய குடும்பத்து முன்னோரது (பிதுரரது) ஆசீர்வாதம் அவசியம் வேண்டற்பாலதாதலின் அதனை வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமக்களது பெற்றோர் தானம் வழங்குவர். இது நாந்தி தானம் எனப்படும்.

**சம்பந்தி உபசாரம்**

பிதுரர் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட மணமக்களுடைய பெற்றோர் தங்களுக்கிடையே சந்தணம், குங்குமம் கொடுத்தும் பன்னீர் தெளித்தும் மரியாதை செய்வர். இது சம்பந்தி உபசாரம் எனப்படும்.

**வர பூசை (மணமகனை மணமகளின் பெற்றோர் உபசரித்தல்)**

மணமகளின் பெற்றோர் தமது பார்வதியாகிய மணமகளைத் திருமணம் செய்யவிருக்கும் சிவனாக மணமகனை உருவகித்து, மண மகனின் கால்களை அலம்பி, விபூதி சந்தணம் பூசி அட்சதை வைத்து உபசாரம் பண்ணி சிவனாக வரித்துக்கொள்வர். இது வரபூசை எனப்படும்.

**கன்னிகாதானம்**

மணமகளுடைய தந்தையார் மணமகளுடைய கையை மணமகனு டைய கையில் கொடுக்க தனது கணவரது கரங்களிலே மணமகளின் தாயார் நீர் வார்த்து மணமகளை மணமகனிடம் ஒப்படைக்க மணமகன் மணமகளது கைத்தலம் பற்றி அவளை ஏற்றுக்கொள்வது கன்னிகாதானம் எனப்படும். கையிலே நீர் விடுதல் ஒரு பொருளை ஒப்படைதற்கான அறிகுறியாகும். நீர்த்தாரையோடு கொடுத்தலால் இதைத் தாராதத்தம் என அழைப்பர்.

மணமக்களின் தந்தையர்கள் இருவரும் தலைப்பாகை அணிந் திருத்தல் வேண்டும். வெற்றிலையொன்றில் பாக்கு, வாழைப்பழம், தேசிக்காய், பொற்காசு (அல்லது நாணயக் குற்றி) ஆகியவற்றை மணப்பெண் தனது வலக்கரத்தில் வைத்திருக்க வேண்டும். மணமகளின் தந்தை அக்கரத்தைத் தனது இடது கை கீழாகவும் வலது கை மேலாகவும் அமையச் சேர்த்துப் பிடித்திருப்பார். சிவாச்சாரியார் மணமக்களது பூட்டன்மார், பேரன்மார்,தகப்பன்மார் ஆகியோரது பெயர்களை மூன்று தடவை கூற, மணமகளின் தந்தை "இரு குடும்பங்களும் வம்ச விருத் தியடைந்து அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பேறுகளையும் பெறுதற்காக எனது மகளைக் கன்னிகாதானம் செய்து தருகிறேன் - எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்றுவாயாக" எனக் கூற, மணமகன் தனது சம்மதத்தைத் தெரிவிக்க,மணமகளின் தாயார் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரதும் மகளினதும் கரங்களில் மூன்று முறை நீரைத் தாரையாக வார்ப்பார். மணமகளின் தந்தை தனது மகளின் கரங்களை மணமகனிடம் ஒப்படைப்பார். அதாவது கன்னிகாதானம் செய்வார். மணமகன் எழுந்து நின்று மணமகளை ஏற்றுக்கொள்வார்.

கன்னிகாதானம் நடைபெறும் போது மணமகள் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப்பார். கெட்டி மேளம் முழங்கும்.

## மங்கலநாண் (தாலி) கட்டுதல் /பூட்டல்

கன்னிகாதானம் நிகழ்ந்தவுடன் மணமகன் தம்முடன் எடுத்து வந்த கூறைத் தட்டத்திலுள்ள பொருட்களில் வாசனைக் பொருட்கள், பவுடர்,சீப்பு, கண்ணாடி போன்றவற்றை வேறாக எடுத்து வைத்து விட்டு கூறைத்தட்டிலுள்ள ஏனைய மங்கலப் பொருட்களைச் சிவாச்சாரியார் மந்திர சுத்தி செய்து பூசித்து ஆசீர்வதிப்பார். பின் மணமகன் கூறைத்தட்டைத் தனது தாய் மாமன்-மாமி (இல்லாதவிடத்து தந்தை வழி மாமன்-மாமி) யிடம் கையளித்து அதனை மணவிழாவிற்கு வருகை தந்திருக்கும் பெரியவர்களிடம் காட்டி அவர்களது ஆசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வார். கூறைத்தட்டை எடுத்துச்செல்லும் மாமன் தலைப்பாகை அணிந்திருத்தல் வேண்டும். சபையிலுள்ள பெரியோர் கூறைத்தட்டைத் தமது இரு கரங்களாலும் தொட்டு ஆசி வழங்குவர். ஆசி பெற்றபின் தாலி, மஞ்சட்கயிறு அல்லது தாலிக்கொடி அல்லது அவையிரண்டும் தவிர்ந்த கூறைத்தட்டிலுள்ள ஏனையவற்றை (கூறை, சட்டை, கொண்டை மாலை, மணமாலை) மணமகன் மணமகளிடம் கொடுப்பார். மணமகள் கூறைத்தட்டைத் தமது தோழியுடன் மண்டபத்தில் உள்ள தமது அறைக்கு எடுத்துச் சென்று கூறைச் சேலையை உடுத்திக்கொள்வாள்.

மணமகள் கூறை உடுத்தி வருமுன் சிவாச்சாரியார் திருமாங்கல் யத்தை மந்திர சுத்திசெய்து சந்தணம் குங்குமம் சாத்தி தீபம் காட்டி சம்பாத ஹோமம் செய்து பிரார்த்தித்து அதனை மஞ்சட் கயிறு அல்லது கொடியில் கோர்த்து வைத்திருப்பார்.

மணமகள் கூறையுடுத்தி மணமாலையைக் கையில் ஏந்தியவாறு தோழியர் புடைசூழ மணமேடைக்கு வந்து மணமகனுக்கு மணமாலையை அணிவித்துவிட்டு அவரது வலப்பாகத்தில் அமர்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமயத்தில் நாள், கோள் குற்றங்கள் அகலப் பின்வரும் திருமுறைப் பாடல் ஓதத் தக்கது:

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

இத்தேவாரம் ஓதியதும் மணமகன் எழுந்து இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு மணமகளின் வலப் பக்கம் வந்து வடக்கே பார்த்தவண்ணம் நின்று சிவாச்சாரியார் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மஞ்சட் கயிற்றில் கோர்த்த திருமாங்கல்யத்தை மணமகளின் கழுத்திலே மூன்று முடிச்சுப் போட்டுக் கட்டுவார். இதுவே முறை. பொன்னால் செய்த தாலிக்கொடியில் தாலி கோர்க்கப்பட்டிருப்பின் மணமகன் தாலிக்கொடியை மணமகள் கழுத்தில் பூட்டுவார். அப்போது சுமங்கலி யொருவர் மணமக்களுக்கு பின்புறம் காமாட்சி விளக்கொன்றை ஏந்தி நிற்பார். மந்திரங்கள் ஒலிக்கும். கெட்டி மேழம் முழங்கும். மணமகனின் உறவினரொருவரால் தேங்காய் இரு பாதியாக உடைக்கப்படும். பெரி யோர்கள் அட்சதையும் பூவும் தூவி ஆசீர்வதிப்பார்கள்.

அப்போது சிவாச்சாரியார் ஓதும் மந்திரம்:

"மாங்கல்யம் தந்து நானேந மம ஜீவன ஹேதுநா//
கண்டே பத்நாமி சுபகே ஸஞ்ஜீவ ஸரத: சதம் //"

**இதன் பொருள்:** "இம்மாங்கல்யம் நான் சிரஞ்சீவியாக வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன். சௌபாக்கியவதியே! நீயும் நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப்பாயாக".

மூன்று முடிச்சுக்களும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலி கட்டிய / பூட்டிய பின் மணமகன் சிவாச்சாரியார் ஓதும் மேற்கண்ட மந்திரத்தைச் செவிமடுத்தவாறு முடிச்சின் / கொடிச்சுரையின் மேல் விபூதி, குங்குமம் பூசி அவள் நீண்ட ஆயுளோடு வாழப் பிரார்த்திப்பார். திருமணத்தின் அடையாளமாக மணமகளின் உச்சந்தலையில் மணமகன் குங்கும திலகம் இட்டுவிட்டு அவளது இடப்பக்கலில் மீண்டும் அமர்வார். அமர்ந்தபின், மணமகன் தனது வலது கையால் மணமகளின் நெற்றியில் அவள் வலத்தோள் வழி திருநீறு பூசி, சந்தண, குங்கும திலகங்கள் இட வேண்டும். தலையிற் பூச்சூட்டுதல் வேண்டும்.

**மாலை மாற்றுதல்**

அதன்பின் மணமகள் எழுந்து வடக்கே நோக்கி நின்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு மணமகனின் கழுத்தில் மாலை சூட்டுவார். மணமக்கள் இருவரும் எழுந்து தமது கழுத்திலுள்ள மாலைகளை மூன்று தடவை மாற்றிச் சூட்டிக் கொள்வர். இந்து சம்பிரதாயப்படி ஒருவர் அணிந்த மாலையை இன்னொருவருக்கு அணிவது முறையல்ல. இரு உள்ளங்கள் இணைந்து ஈருடல் ஒருயிர் ஆவதைக் குறிப்பதாகவும் இல்லற வாழ்வின் தொடக்கமாகவும் மாலை மாற்றும் சடங்கு அமைகிறது.

மாலை மாற்றியபின் மணமகன் மணமகளைத் தனது இடது பக்கம் அமரச்செய்து, தன் துணைக்கு தாம் எடுத்து வந்த மஞ்சள், குங்குமம், பூக்கள், வாசனைத்திரவியம், சீப்பு, கண்ணாடி போன்ற மங்கல உபசாரப் பொருட்களை அன்பளிப்பாக வழங்குவார். இருவரும் தமது முகங்களை ஒன்றாகக் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.

அப்போது பின்வரும் திருமுறைப் பாடல் ஓதத் தக்கது:

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

**மதுபர்க்கம் ஊட்டல் (பால், பழம் ஊட்டல்)**

தயிர், தேன், சர்க்கரை, நெய், பழம் சேர்ந்த கலவை மதுபர்க்கம் எனப்படும். மணமகன் மணமகளுக்கு மூன்று தடவை மதுபர்க்கம் ஊட்டுவார். பின் மணமகளும் மணமகனுக்கு மூன்று தடவை மதுபர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டுவார். உணவு உட்கொள்ளல் சபையினர் முன் இடம்பெறுவது அழகல்லவாதலால் மதுபர்க்கம் ஊட்டும்போது மணமேடைக்கு முன் மறைப்புக்காகத் திரையொன்று பிடிக்கப்படும். மதுபர்க்கம் ஊட்டல் தம்பதிகளின் இணைந்த வாழ்க்கை மதுபர்க்கம் போல் சுவையானதாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதற்காகும். இக்காலத்தில் மதுபர்க்கத்திற்குப் பதிலாக பசும்பாலுடன் கலந்த வாழைப்பழத் துண்டுகளை ஊட்டக் கொடுக்கும் நடைமுறையுள்ளது.

## பசு வழிபாடு (கோ தரிசனம்)

இந்துக்கள் பசுவை இலட்சுமியாகப் பூசிப்பர். பசுவின் உடலெங் கும் முப்பத்து முக்கோடி தேவர்களும் உறைவதாகக் கூறுவர். பசுவை வணங்கினால் வாழ்க்கைக்கு வேண்டிய எட்டுச் செல்வங்களும் (அஷ்ட ஐஸ்வரியங்களும்) கிடைக்கும். ஆகவே மணமக்கள் பசுவொன்றை கிழக்கு முகமாக நிறுத்தி அதற்குச் சந்தணம், குங்குமம் சாத்தி மாலை அணிவித்து பழம் கொடுத்து தீபாராதனை செய்து வணங்குவர். இது இக்காலத்தில நடைமுறையில் இல்லை. பதிலாக குத்துவிளக்கை வழிபட்டு இலட்சுமி கடாட்சம் பெறுவர்.

அச்சமயம் கோதானமாக சிவாச்சாரியார் ஒருவருக்கு தானம் (அரிசி, காய்கறி, தேங்காய், தெட்சணை) வழங்கப்படுவதும் சில இடங்களில் வழக்கிலுள்ளது. கோ தரிசனமே வேண்டற்பாலது. கோதானமன்று.

## கைத்தலம் பற்றல் (பாணிக்கிரகணம்)

பாணி - கை. கிரகணம் - பற்றல். மணமகளின் கரத்தை மணமகன் பற்றிக்கொள்வது பாணிக்கிரகணம் என்பதன் பொருள். திருமால் தனது கைத்தலம் பற்றக் கனவு கண்டதாக ஆண்டாள் திருப்பாவையில் அருளிச் செய்கிறார். "நீயும் நானும் முதுமையிலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப்போம் என்று கையைப்பிடிக்கிறேன்" எனக்கூறி மணமகன் தனது வலக்கரத்தால் மணமகளின் வலக்கரத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். பற்றும்போது மணமகள் கை கீழேயும் மணமகன் கை மேலேயும் இருத்தல் வேண்டும்.

## ஏழடி நடத்தல் (சப்தபதி)

சப்த-ஏழு. பதி-அடி. மணமக்கள் கைத்தலம் பற்றியபடி தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் சிவாக்கினியை மூன்று தடவை எரிவலம் வருவார்கள். ஒவ்வொரு சுற்று முடிவிலும் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நின்று சிவாச்சாரியாரியாரிடம் தோழன் பெற்றுத்தரும் நெல் மலரை (நெற்பொரியை) வாங்கி மணமகளுடன் இணைந்து சிவாக்கினியில் இட்டு தமக்கு சகல செல்வமும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பர். (நெல் மலர் நெல்லைச் சூடாக்கி உமி வேறாக்கப்பட்ட பின் பெறப்படும் மலர் போல் விரிந்த வெண் பொரியாகும். வேண்டத் தகாதவை நீங்கிய அப்பழுக்கற்ற பழுத்த -பூத்த - நிலையை நெற்பொரி குறிக்கும்). நெல்லானது அப்பழுக்கற்ற மலராக மலர்ந்துள்ளது போல் எம் வாழ்வும் மலர வேண்டும் எனப் பிரார்திப்பதற்கு உகந்த பொருளாக நெல் மலர் விளங்குகிறது.

**முதற் சுற்றின் முதல் ஏழடிக்கும் ஒவ்வோர் மந்திரம் ஓதப்படும்: அவற்றின் பொருள்:**

1. பசியற்ற வாழ்வுக்கு இறைவன் பின் தொடரட்டும்.
2. உடல் வலிமைக்கு இறைவன் பின் தொடரட்டும்.
3. இறை வழிபாட்டின் போது இறைவன் பின் தொடரட்டும்.
4. உடல் நலமும் மன அமைதியும் பெற இறைவன் பின் தொடரட்டும்.
5. பசு முதலான கால்நடைகள் விருத்தியடைய இறைவன் பின் தொடரட்டும்.
6. செழுமையான வாழ்வுக்கு இறைவன் பின் தொடரட்டும்.
7. மங்கலகரமான நிகழ்வுகளும் அக்னிகாரியங்களும் வாழ்க்கை முழுவதும் இடம்பெற இறைவன் பின் தொடரட்டும்.

"போதிய உணவு, உடற்பலம், இறைவழிபாடு,உடல் நலமும் மன அமைதியும், செழுமையான வாழ்வு, பொருட்சேர்க்கையும் அதனால் கிடைக்கும் சுகங்களும், யாகங்களுக்கு துணை நிற்றல் ஆகிய இல்வாழ்வில் பெற வேண்டிய ஏழு பொருட்களையும் பெறுவதற்கு இருவரும் கை கோர்த்து இணைந்து இறையருளுடன் முயற்சிப்போம். அப்போது நாம் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்து சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வோம்" எனபதை ஏழடி நடத்தல் குறிக்கும்.

**அம்மி மிதித்தல், மெட்டி அணிதல், கணையாழி (மோதிரம்) எடுத்தல், அருந்ததி பார்த்தல்**

முதற் சுற்றில் சிவாக்கினியை வலமாக ஏழடி எடுத்து வைத்து நடந்து வரும் போது அவ்விடத்தில் அம்மி வைக்கப்பட்டிருக்கும். ஏழடி நடந்தவுடன் மணமகளின் வலது காலை மணமகன் தூக்கி (இது எட்டாவது அடி) அம்மி மேல் வைத்து பெருவிரலுக்கு அ[illegible]ந்த விரலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டி எனும் வெள்ளி வளையம் அணிவிப்பார். அம்மிக் கல்லைப் போல உறுதியாக இருந்து ஆண் ஒழுக்கத்தையும் பெண் கற்பையும் காக்க வேண்டும் என்பதை இது உணர்த்தும். மேலும் கல் எவ்வாறு எதையும் தாங்குகிறதோ அதுபோல் வாழ்வில் துன்பங்களையும் பின்னடைவுகளையும் கண்டு தளராது உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்பதை அம்மி மிதித்தல் உணர்த்துகிறது. மணமகளது காலை மணமகன் பிடித்துத் தூக்குவது மணமகன் மணமகளுக்கு அளிக்கும் உயர் கௌரவத்தைக் காட்டும்.

அம்மி மிதித்த பின் தம்பதிகள் தொடர்ந்து நடந்து சிவாக்கினியை இரண்டாவது தடவை வலம் வருவர். அப்போது மணமகன் மணமகளின் இடது காலைத் தூக்கி அம்மி மேல் வைத்து அக்காலின் பெருவிரலுக்கு அடுத்த விரலில் மற்றுமொரு மெட்டி அணிவிப்பார். மேலே பார்க்கும் போது கழுத்தில் உள்ள தாலியும் கீழே பார்க்கும் போது கால் விரல்களிலுள்ள மெட்டிகளும் அவள் திருமணமானவள் என்பதைக் காட்டும் என்பதனாலேயே மெட்டி அணிவிக்கப்படுகிறது.

மூன்றாவது சுற்றின் போது கிழக்குத் திசையில் வலப்பக்கமாக அலங்கரித்த பானையொன்று மஞ்சள் மா கலந்த நீரினால் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும். அதற்குள் கணையாழியொன்று(மோதிரமொன்று) போடப்பட்டிருக்கும். மணமக்கள் ஒரே சமயத்தில் தமது வலது கைகளால் பானையுள் உள்ள மோதிரத்தை எடுக்க முயற்சிக்க வேண்டும். மூன்று தடவை இவ்வாறு செய்யப்படும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து கணையாழியை எடுத்தல் வேண்டும். இது அவர்கள் தம் வாழ்வில் இணைந்தும் விட்டுக்கொடுத்தும் நடக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

மூன்றாவது சுற்றின் போது வட திசையில் அருந்ததி காட்டுவது சம்பிரதாயம். வசிட்டர் ஏழு மகாரிஷிகளில் ஒருவர். அவரது மனைவி அருந்ததி பெரும் பதிவிரதை. புராணங்களிலும் இந்திய வானசாஸ்திரத்திலும் இரட்டை நட்சத்திரமொன்று (Twin Stars) இவர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது. வசிஷ்ட நட்சத்திரம் (ஆங்கிலப் பெயர் Mizar) புவியின் வடதுருவமுனைக்கு நேர் மேலாகவிருப்பதால் அது எக்காலமும் ஓரிடத்திலேயே நிலையாகத் தெரியுமொரு நட்சத்திரம். அருந்ததி நட்சத்திரம் (ஆங்கிலப் பெயர் Alcor) வசிஷ்ட நட்சத்திரத்திற்கு மிக அண்மையில் அதனைச் சுற்றியவண்ணம் தெரியும் நட்சத்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் வசிஷ்ட நட்சத்திரமும் அருந்ததி நட்சத்திரமும் இரட்டை நட்சத்திரங்கள் (twin stars) என அழைக்கப்படும். வசிஷ்ட நட்சத்திரம் எக்காலமும் ஓரிடத்திலேயே தெரிவதால் அது உறுதியான நிலைக்கு உதாரணமாகவும் அருந்ததி நட்சத்திரம் எப்போதும் வசிஷ்ட நட்சத்தி ரத்திற்கு மிக அண்மையில் சுற்றிக்கொண்டிருக்கக் காணப்படுவதால் அது பதிவிரதாதர்மத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் கருதப்படுகிறது. அதனால் ஒருதாரம் என்பதிலும் செய்யும் கருமங்களிலும் கொள்கைகளிலும் மணமகனுக் கிருக்கவேண்டிய உறுதிப்பாட்டிற்கும் இலக்கணமாக வசிஷ்ட நட்சத்திர மும் மணமகளிற்கிருக்க வேண்டிய பதிவிரதா இலட்சணத்திற்கு இலக்க ணமாக அருந்ததி நட்சத்திரமும் பேசப்படும். ஆகவே மணமக்களும் வசிஷ்டர் - அருந்ததி போல் வாழ முயற்சிக்க வேண்டும் என்பதை உணர்த்தும் நோக்கில் புதுமணத்தம்பதிகளுக்கு இந்நட்சத்திரங்கள் காண்பிக்கப்படும். இது சுருக்கமாக "அருந்ததி பார்த்தல்" எனப்படும்.

முற்காலத்தில் மணநாளன்று இரவு மணமக்களுக்கு அருந்ததி காட்டும் நிகழ்வு நடைபெற்றது. இன்று அது சம்பிரதாயமாக திருமண வறையிலேயே ஞாபகத்திற்குக் கொண்டுவரப்பட்டு அருந்ததி நட்சத்திரம் இருக்கும் திசை நோக்கி வணக்கம் செலுத்தப்படுகிறது. சிலர் அருந்ததி கும்பம் வைத்து அதற்கு மலர் சொரிந்து வணங்குவர்.

### பூர்ணாகுதி

மூன்றாவது சுற்று நிறைவுற்றதும் கிரியைகளை நிறைவு செய்ய சிவாக்கினியில் பூர்ணாகுதி செய்யப்படும். பூரணாகுதிக்குரிய பொருட் கள் (சமித்து, வெற்றிலை பழம் பாக்கு, பட்டு, நெல்மலர், தர்ப்பை, தேங்காய், நாணயக்குற்றி) கொண்ட தட்டத்தை சிவாச்சாரியார் மணமகனிடம் கொடுப்பார். மணமகன் அதனைப் பெற்று மணமகளுடன் இணைந்து ஓம குண்டத்தில் இடுவார். சிவாச்சாரியார் சிவாக்கினிக்கு கர்ப்பூர தீபம் காட்டி அக்னி வழிபாட்டை நிறைவு செய்து அக்கினியில் தர்ப்பைப் புல்லைத் தகித்து பெறப்பட்ட சாம்பலில் நெய் சேர்த்து பொட்டாக்கி அதனை நெற்றியில் திலகமாக மணமக்களை அணியவைத்து அவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் விபூதி சந்தணம் வழங்கிக் கிரியையை நிறைவு செய்வார்.

### சிவாச்சாரியாரதும் மணமக்களது பெற்றோரதும்ஆசீர்வாதம்

கிரியைகள் நிறைவுற்றதும் மணமக்கள் கிழக்கு நோக்கி எழுந்து நிற்க சிவாச்சாரியார் ஆசீர்வாத மந்திரங்களை ஓதி சிரசில் அட்சதையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வதிப்பார். தொடர்ந்து மணமக்களின் பெற்றோரையும் ஆசீர்வதிப்பார். மணமக்கள் தம் கரங்களில் கட்டப்பட்டிருக்கும் காப்புக்களை தாமே அவிழ்த்தெடுத்து அவற்றுடன் மணமக்களும் பெற்றோரும் அணிந்திருக்கும் பவித்திரங்களையும் கழற்றுவித்து வாங்கி எல்லாவற்றையும் தட்டொன்றில் வெற்றிலையில் வைத்து தெட்சணையும் சேர்த்து சிவாச்சாரியாருக்கு வழங்க வேண்டும். சிவாச்சாரியாரின் உதவியாளருக்கும் தெட்சணை வழங்க வேண்டும். இருவருக்கும் சாப்பாட்டிற்குரிய அரிசி காய்கறிகளும் வேட்டி சால்வையும் வசதிக்குத் தகத் தானமாக வழங்கப்படும்.

அதன் பின்னர் மணமகனின் பெற்றோரதும் மணமகளினது பெற்றோரதும் ஆசீர்வதிப்பு இடம்பெறும்.

**பெரியோர் ஆசீர்வாதம்**

பின்னர் திருமணத்திற்கு வருகை தந்திருக்கும் பெரியோர்கள் மணமக்களை ஒவ்வொருவராக ஆசீர்வதிப்பர். மணமக்களுக்கு முன்பாக முக்காலியொன்றில் தட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறுகரிசையை (அட்சதையை)ப் பெரியோர்கள் தமது இருகரங்களாலும் எடுத்து "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் சூழ பதினாறு பேறுகளும் பெற்று பெரு வாழ்வு வாழ்க" என வாழ்த்தி உச்சியில் அறுகரிசி இடுவர். மணமகனுக்கு மூன்று தடவையும் மணமகளுக்கு மூன்று தடவையும் தனித்தனியே இட வேண்டும்.

அறுகரிசியானது பழுதற்றதும் முனை உடையாததுமான முழு அரிசியாக இருத்தல் வேண்டும். அது மஞ்சள் பொடி பன்னீர், பூ,அறுகு ஆகியவற்றுடன் கலந்து இருத்தல் வேண்டும். (உமி நீக்கிய அரிசி போல்) விரும்பத்தகாதன அற்றதாகவும், பழுதற்றதாகவும் முழுமையானதாகவும் மஞ்சள் போல் மங்கலகரமானதாகவும் வாழ்வு அமையவேண்டும் என்பதே அறுகரிசியால் ஆசீர்வதிப்பதன் நோக்கமாகும். அறுகு நன்கு பரவும் தன்மையும் இலகுவில் அழியாத தன்மையும் உடையதால் அறுகையும் சேர்த்து உபயோகிப்பது சந்ததி அழியாது தழைத்துப் பரவவேண்டும் என ஆசீர்வதிப்பதாயமைகிறது.

அறுகரிசியை தலை முதல் கால் வரை (கேசாதி பாதம்) இடுவதே முறை. அறுகரிசியிடுதல் ஆசீர்வதிப்பேயன்றி வழிபாடல்ல. (வழிபாட்டு முறையிலேயே கால் முதல் தலை வரை (பாதாதி கேசம்) இடம்பெறும்.) மணமக்களின் தலையில் தனித்தனியே அட்சதை தூவி ஆசீர்வதிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவர்களின் தலை, இருதோள், இடுப்பு, முழந்தாள் வரை தனித்தனியே சொரிந்து ஆசீர்வதிக்கலாம்.

**மங்கல ஆரத்தி**

மணமகன் குடும்பத்தைச் சேர்ந்த சுமங்கலி ஒருவரும் மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த சுமங்கலி ஒருவரும் இணைந்து கண் திருஷ்டி நீங்க ஆரத்தி எடுப்பார்கள்.

**பூதமோதனம் அல்லது பூதாக்கலம்**

பூதமோதனம் என்பது சாதம், கறிவகை முதலிய சாப்பாட்டுப் படையலைக் குறிக்கும். அச்சொல் மருவி பூதாக்கலம் எனப்படுகிறது. மணமக்களுக்கு ஒரே வாழையிலையில் உணவு பரிமாறப்படும். மணமகள் தன் கையால் மணமகனுக்கு உணவு ஊட்டுவாள். பின் மணமகன் தன் கையால் மணமகளுக்கு உணவு ஊட்டுவார். இது பூதாக்கலம் எனப்படும். திருமணம் பெண் வீட்டில் நடந்தால் பூதாக்கலம் பெண் வீட்டில் நடைபெறும். திருமணம் மண்டபமொன்றில் நடந்தால் பூதாக்கலம் மண்டபத்திலேயே நடைபெறும்.

திருமணம் மண்டபமொன்றில் நடைபெறுவதாயின், விருந்தினர் ஆசீர்வாதம், பூதாக்கலம் ஆகியன முடிந்த பின்னர், மணமகனின் பெற்றோரும் இரு வீட்டு நெருங்கிய உறவினர்களும் மணமக்களை அலங்கரித்த வாகனமொன்றில் மணமகள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். மணமகளின் பெற்றோரும் அவரது நெருங்கிய ஒரு சில உறவினரும் சிறிது முன்னராகத் தம்முடைய வீடு சென்று மணமக்களை வரவேற்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்து அவர்கள் வருகைக்காகக் காத்திருப்பர்.

மணமகள் வீடு செல்லும் வழியில் மணமக்களது குலதெய்வங்களின் கோவில்களில் தேங்காய் உடைத்து கர்ப்பூரம் கொழுத்தி வணங்கிச் செல்வர். மணமகள் வீட்டை மணமக்கள் அடைந்ததும் வீட்டு வாசலில் மணமக்களுக்கு மணமகளின் பெற்றோர் மாலை அணிவித்த பின் இரு சுமங்கலிகளால் மங்கள ஆரத்தி எடுக்கப்படும். மாப்பிள்ளைத் தோழன், மணமகன், மணமகள், மணமகளின் தோழி என்ற வரிசையில் தத்தமது வலது காலை முதலில் எடுத்து வைத்து வீட்டினுள் செல்வர். அங்கு வழிபாட்டறையில் வழிபட்டபின் சிறிது நேரம் ஓய்வெடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான நேரம், வசதிகள் இருப்பின் திருமணப் பதிவை ஒரு சில மணித்தியாலங்கள் கழித்து மணமகள் வீட்டிலேயே வைத்துக் கொள்ளலாம். பிறிதொரு நாளிலும் வைத்துக்கொள்ளலாம். திருமணத்தைப் பதிவு செய்யும் நிகழ்வுக்கு எதுவித சமய ரீதியான நடைமுறைகளும் இல்லை. ஆயினும் மங்கல நாண் பூட்டுதற்கு முன்னர் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வது இந்து சமய சம்பிரதாயங்களுக்கு இசைவானதன்று.

ஒய்வின் (மற்றும் திருமணப் பதிவின்) பின் மணமகளை மணமகன் தனது வீட்டிற்கு அலங்கரித்த வாகனமொன்றில் அழைத்துச் செல்வார். புறப்படும்போது மணமகள் வீட்டு வாசலில் இரு சுமங்கலிகள் ஆரத்தி எடுத்து மணமக்களை வழியனுப்பிவைப்பர். மணமகனின் தோழன், மணமகளின் தோழி மற்றும் மணமகளின் உறவினர் சிலர் மணமக்களுடன் செல்வர். மணமகனின் பெற்றோரும் அவரது நெருங்கிய ஒரு சில உறவினரும் சிறிது முன்னராகத் தம்முடைய வீடு சென்று மணமக்களை வரவேற்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்து அவர்கள் வருகைக்காகக் காத்திருப்பர். மணமகன் வீட்டை மணமக்கள் அடைந்ததும் வீட்டு வாசலில் மணமக்களுக்கு மணமகனின் பெற்றோர் மாலை அணிவித்த பின் இரு சுமங்கலிகளால் மங்கல ஆரத்தி எடுக்கப்படும். மாப்பிள்ளைத்தோழன், மணமகன், மணமகள், மணமகளின் தோழி என்ற வரிசையில் தத்தமது வலது காலை முதலில் எடுத்து வைத்து வீட்டினுள் செல்வர். அங்கு வழிபாட்டறையில் இறைவழிபாடு செய்து மணமகனின் பெற்றோரின் கால்களைத் தொட்டு வணங்குவர். அவர்கள் மணமக்களை ஆசீர்வதித்து தமது வீட்டிற்கு முதன் முதலாக வந்திருக்கும் மணமகளுக்கு அன்பளிப்பொன்று வழங்குவர். அதன் பின் மணமக்கள் வீட்டு அலங்கார மண்டபத்தில் அமைக்கப் பட்டிருக்கும் இருக்கையில் அமர்ந்து அங்கு வரும் விருந்தினர்களை வரவேற்று அளவளாவுவர்.

**கால் மாறல்**

திருமண நாளன்று இரவை மணமக்கள் மணமகன் வீட்டிலேயே கழிப்பர். மூன்றாம் நாள் மணமகள் வீட்டார் மணமகன் வீடு சென்று மணமக்களைத் தம் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். அங்கு மணமக்களை இரு சுமங்கலிகள் மங்கள ஆரத்தி எடுத்து வரவேற்பர். அங்கு எண்ணை தேய்த்து முழுகி கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து விட்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்துண்பர். பின் மணமகன் சந்தைக்குச் சென்று வேண்டிய பொருட்களை வாங்கி வருவார். அதன்பின் மணமக்கள் மணமகனது வீடு திரும்புவர். இது கால் மாறுதல் என அழைக்கப்படும். அதாவது மணமகளைத் திருமணம் செய்து கொண்டு மனைவியைத் தனது வீட்டிற்கு அழைத்து வந்த மணமகன் மீண்டும் தம்பதிகளாக மணமகளின் பெற்றோர் வீடு சென்று திரும்புதல் கால்மாறல் எனப்படும். மூன்றாவது நாள் சுபநாளாக அமையாவிடின், திருமண நாளன்றே கால் மாறுதல் சுருக்கமாக இடம்பெறும். கோவில், சந்தைக்குப் போதல் பிறிதொரு நாளில் நடைபெறும். கால் மாறுதல் ஒற்றை நாளில் (1,3,5) இடம்பெறவேண்டும். கால் மாறிய பின்தான் மணமக்கள் இருவரும் தத்தமது பெற்றோரின் குடும்பத்தவர் என்ற நிலை மாறி பிறிதொரு குடும்பமாகக் கருதப்படுவர். பொன்னுருக்கோடு தொடங்கிய திருமணச்சடங்கு கால் மாறுதலுடன் முடிவுக்கு வரும். கால் மாறியபின் மணமக்கள் எதுவித கட்டுப்பாடு மின்றி எங்கும் சென்று வரலாம். மூன்றாம் நாள் நிகழும் கால்மாறலை "நான்காம் சடங்கு" எனவும் அழைப்பர். இது "நாள் ஆறிய சடங்கு" என்பதன் திரிபு. அதாவது திருமணச்சடங்கு முடிவுக்கு வரும் சடங்கு எனப் பொருள். இதனைப் பிழையாக விளங்கிக் கொண்டு நான்காவது நாள் நடைபெறும் ஒரு சடங்கு எனச் சிலர் கூறுவர். புலால் உண்போர் மேலும் ஒரு படி சென்று நாலாம் சடங்கென்பது நாலாம் நாளில் புலால் உணவு பரிமாறும் நாளென்பர். இவை அர்த்தமற்ற கூற்றுக்கள். இந்து சம்பிரதாயங்களின்படி சடங்குகள் ஒற்றை நாட்களிலேயே நடைபெறும். திருமணச்சடங்குகள் மூன்றாம் நாள் நடைபெறும் "கால்மாறல்" அல்லது "நாளாறியசடங்கு" டன் நிறைவுறும்.

**முடிவுரை**

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் திருமணம் என்பது ஓர் தெய்வீக ஒன்று சேர்தல். ஒன்று சேரும் மணமக்களுக்கு அவர்கள் ஆரம்பிக்கும் வாழ்க்கை சுவையானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையெல்லாம் எடுத்துக்காண்பிக்கும் ஒரு நிகழ்வாக இந்துக்களின் திருமணச் சடங்கு அமைகிறது. அது மணமகன், மணமகள் இருவருக்கும் இருக்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு விவரணப் படமொன்று பார்ப்பது போன்றதோர் நிகழ்வு. பல நூல்களைப் படிப்பது மூலம் கிரகித்து வைத்திருக்கக் கூடிய விடயங்களை விட விவரணப் பட மொன்றைப் பார்ப்பதால் கிரகிக்கப்படுவது அதிகம். ஆகவே தான் திருமணச் சடங்கு மணமக்களுக்கும் ஏனையோருக்கும் வாழ்க்கை பற்றி கற்பிக்கும் ஒரு ஊடகமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மணமக்கள் இருவருக்கும் இருக்க வேண்டிய பண்புகள் வலியுறுத்தப்படுவதும் அவர்கள் இருவரும் சமமாக நோக்கப்படுவதும் அதன் சிறப்பம்சங்கள்.

"எந்த வீட்டில் பெண்கள் சந்தோஷத்தை அடைகிறார்களோ அங்கே எல்லா நன்மைகளுமுண்டாகும்" என இந்து சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன. எந்தவொரு கூட்டத்திற்கும் தலைமை வேண்டும். தலைமை இருந்தால் தான் ஒழுங்கு, கட்டுப்பாடு நிலவும். அந்தவகையில் குடும்பத் தலைவனாக மணமகனே விளங்குவது மரபாயிருந்து வந்துள்ளது. காலமாற்றத்திற்கமைய இன்றைய சூழலில் இந்தப் பொறுப்பை கணவன், மனைவி இருவரும் பொருத்தமான வகையில் பகிர்ந்து கொள்வதே குடும்ப நலனுக்கு நல்லது. தம்பதிகள் இசைவுறு நிலைப்பாடுகளைக் கண்டு கொள்வதும் தம்மிடையே விட்டுக்கொடுப்புக்களைச் செய்து கொள்வ தும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதும் அவசியம்.

**நன்றி நவிலல்**

இக் கைநூல் திருமணம் நடைபெறவிருக்கும் குடும்பங்களுக்கு உதவியாயமையும் என நம்புகிறோம். இதன் முதல் பிரதியை வாசித்துத் திருத்தங்கள் கூறியும் பல நுணுக்கமான விடயங்களை எடுத்து விளக்கியும் இக்கைநூலைப் பூரணப்படுத்த உதவிய சைவக் குருமார் ஒன்றியத்தின் மதிப்பார்ந்த தலைவரும் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடி விநாயக ராலய ஆதீனகர்த்தாவுமாகிய சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள் ஐயா அவர்களுக்கு இக்கைநூலின் தொகுப்பாசிரியர் தமது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறார். தவறுகள் ஏதும் இருப்பின் அது தொகுப்பாசிரியருடையதே.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மணமக்களது குடும்பங்களும் மணமக்களும் கல்வி, தொழில், உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் இசைவுறு தன்மையுடையவர்களாக அமைந்து மணமக்களது ஜாதக, மனப் பொருத்தங்கள் சாதகமாயமையும் போது திருமணம் நிச்சயமாகும்.

2. திருமணம் நிச்சயிக்கப்பட்டதும், திருமணத்திற்குப் பொருத்தமான காலம் எது என மணமக்களின் பெற்றோர் பேசித் தீர்மானிப்பர். பொருத்தமான காலத்தில் சுப வேளையை சோதிடர் கணித்துக் கூறுவர். திருமண நாளை நிச்சயிக்கும் போதே பொன்னுருக்கலுக்குப் பொருத்தமான நாளையும் நிச்சயித்துக் கொள்ளலாம்.

3. அடுத்து திருமணத்தை எங்கு நடாத்துவது (பெண் வீட்டிலா திருமண மண்டபத்திலா) என்பது தீரமானிக்கப்படும். மண்டபமொன்றில் எனில் அதனைக் காலம் தாமதிக்காது ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் திருமணங்கள் குறித்த சில மாதங்களில் வரும் சுபமுகூர்த்தங் களிலேயே நடைபெறுவதால் மண்டபங்கள் பல மாதங்களுக்கு முன்பே பதிவு செய்யப்பட்டு விடுகின்றன. மண்டபத்தை ஒழுங்கு செய்யுமுன் திருமணத்திற்கு அழைக்கப்படவிருப்பவர்களின் அண்ணளவான எண்ணிக்கையை சம்பந்த பகுதியினர் பேசித் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். வருகையாளர் எண்ணிக்கைக்கு ஏற்றதாக மண்டபத்தின் கொள்திறன் அமைந்திருத்தல் வேண்டும்.

4.

(அ) அடுத்து திருமணத்தை நடாத்தி வைக்கும் சிவாச்சாரியார் யார் என்பதைத் தீர்மானித்து அவருடன் பேசி திருமணத்தை நடாத்தி வைக்க ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) பொன்னுருக்கலுக்குரிய ஆசாரியரையும் தேர்ந்தெடுத்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(இ) அடுத்து சம்பந்தப்பட்டோர் வசதிக்குத் தக மங்கல வாத்தியகாரரை (தவில், நாதஸ்வரம்) ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.

(ஈ) மண்டபத்தில் மணவறை இல்லாதிருப்பின், வசதிக்குத் தகுந்த மணவறை ஒன்றை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவறையிலும் மண்டபத்திலும் மேலதிகமான அலங்காரங்களை சம்பந்தப்பட்டோர் விரும்பின் செய்து கொள்ளலாம்.

(உ) திருமணத்திற்கு வேண்டிய பூமாலைகளையும் சரப்பந்துகளையும், பெண்களுக்குத் தேவையான கொண்டைமாலை / சரமாலை, மற்றும் மணவறையில் மேலதிக பூ அலங்காரங்கள் செய்யும் விருப்பமுடையோர் அவற்றையும் உரிய நேரத்தில் கொண்டு வந்து தர மாலை தொடுப்பவர்களுடன் ஒழுங்கு செய்து கொள்ளு தல் வேண்டும்.

(ஊ) மணமண்டப முகப்பின் இருமருங்கிலும் மணமக்கள் வீட்டு முன் படலையின் இரு மருங்கிலும் பழுத்த வாழைக்குலையுடைய வாழை மரங்கள் கட்டுவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

(எ) மணமகன் தனது இல்லத்திலிருந்து மணமண்டபத்திற்கு செல்வதற்கும் திருமணத்தின் பின் (மண்டபமொன்றில் திருமணம் நடப்பின்) தம்பதிகள் மணமகள் வீட்டிற்குச் செல்வதற்கும், பின்னர் மணமகளை மணமகன் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கும் அலங்கரித்த வாகனம் (மோட்டர் கார்) ஒன்று ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும்.

(ஏ) மணமகள் வீடு, மணமகன் வீடு, திருமண மண்டபம் ஆகிய இடங்களில் கோலம் போடுதல், மாவிலை தோரணம் போடுதல் மற்றும் அலங்காரங்கள் செய்தற்கான பொறுப்புகளை உறவினர் ஒவ்வொருவரிடம் ஒப்படைத்து அதற்கு வேண்டிய மூலப் பொருட்களை (மாவிலை, தென்னங்குருத்து, கயிறு, மரங்கள்) சேகரித்துக் கொடுக்க வேண்டும்.

(ஐ) வெளிநாட்டிலிருந்து அல்லது வெளியூரிலிருந்து விருந்தினர்களை எதிர்பார்த்தால் அல்லது அவர்கள் வருவதாக அறியத்தரின் அவர்கள் தங்குவதற்கு தளபாட வசதிகளுடன் கூடிய ஓரிரு வீட்டை குறுகிய காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு சாப்பாடு, சிற்றுண்டி ஒழுங்காகக் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(ஒ) மணமக்கள் வீட்டிற்கு வருகை தருபவர்கள் அமர வீட்டில் போதிய ளவு இடவசதி இல்லையாயின் வீட்டு முகப்பில் பந்தலிட்டு அதை அலங்கரித்து அங்கு இருக்கைகளை வாடகைக்குப் பெற்று ஒழுங்காகப் பரவிவைத்தற்கான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அடுத்து இரு பகுதிப் பெற்றோரதும் மணமக்களதும் விருப்பங்களை உள்ளடக்கியதாக திருமண அழைப்பிதழ் தயாரித்து அச்சிடுவித்தல் வேண்டும்.

6.

(அ) இருபகுதியினரும் அழைப்பாளர் பட்டியலைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். வெளிநாட்டவர், வெளியூரவர், உறவினர், நண்பர்கள், மணமக்கள் அவர்தம் பெற்றோருடன் பணியாற்றுபவர்கள் இவ்வாறு வெவ்வேறு பட்டியல்கள் தயாரிப்பது உதவும். பெற்றோர் நேரடியாக அழைப்பு விடுக்க வேண்டியவர்கள், வேறு நபர்கள் மூலம் அழைப்பைக் கொடுத்தனுப்பக் கூடியவர்கள், தபாலில் அழைப்பனுப்ப வேண்டியவர்கள் எனப் பட்டியலை மேலும் வகைப்படுத்திக் கொள்வது உதவும்.

(ஆ) வெளிநாட்டவர், வெளியூரவர்களுக்கு முதலில் தபாலில் அழைப்பிதழை அனுப்ப வேண்டும். வருகை தரக்கூடும் எனக் கருதும் வெளிநாட்டு, வெளியூர் உறவினர் நண்பர்களுக்கு திருமண நாள் குறித்தவுடன் தொலைபேசியூடாகவோ மின்னஞ்சல் மூலமோ திருமண நிச்சயச் செய் தியை அறிவிக்கலாம். இது வேண்டிய பயண ஒழுங்குகளை மேற்கொள்ள உதவும்.

(இ) பெற்றோர் நேரில் சென்று அழைக்க வேண்டிய உறவினர், சமூகத் தலைவர்கள் போன்றோருக்கும் வேளைக்கே அழைப்பிதழைக் கொடுப்பது நல்லது. இது பெற்றோரின் வேலைப்பழுவைக் குறைத்து ஏனைய திருமண ஏற்பாடுகளில் கவனம் செலுத்த உதவும்.

(ஈ) ஏனைய உள்ளூரவருக்கு பத்து நாட்களுக்கு முன் அழைப்பிதழ் கொடுக்கலாம் / அனுப்பலாம். இது திருமண நாளை ஞாபகத்தில் வைத்திருக்க உதவும்.

7. திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன், மணமகன் வீட்டார் . சுப நாட்களில்,

(அ) மங்கலநாணுக்கு (தாலிக்கு) வேண்டிய தங்கம், மற்றும் தாலிக் கொடி செய்வதாயின் அதற்கு வேண்டிய தங்கம், மணமகன் மணமகளுக்கு ஒவ்வோர் மோதிரம், மணமகள் திருமணமாகி முதன் முதல் மணமகன் வீட்டிற்கு வரும்போது மணமகனின் தாய் மணமகளுக்கு அன்பளிப்பாக அணிவிக்கக் கூடியவொரு ஆபரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பதக்கம் சங்கிலி), மணமகனின் தோழனுக்கு மோதிரம் ஆகிய வற்றிற்கான தங்கத்தையும் மணமகள் காலுக்கு இரு வெள்ளி மெட்டிகளையும் கொள்வனவு செய்து திருமாங்கல்யம் (தாலி) தவிர்ந்த ஏனையவற்றைச் செய்வித்துக் கொள்ள வேண்டும். (திருமாங்கல்யம் பொன்னுருக்கல் சடங்கின் பின்பே செய்ய வேண்டும்).

(ஆ) மணமகளுக்கு அணிவிப்பதற்கான கூறைச்சேலை, சட்டை, மணமகனுக்கு பட்டு வேட்டி சால்வை, தலைப்பாகை, மணமகனின் தோழனுக்கு தலைப்பாகை, மணமகனின் பெற்றோர் சகோதரர் களுக்கு பட்டு வேட்டி சால்வை / பட்டுப்பிடவை ஆகியவற்றை வாங்கிக் கொள்ள வேண்டும்.

(இ) திருமணப் பதிவு நிகழ்வின் போது பெண்ணுக்கு அன்பளிக்க மாப்பிள்ளை வீட்டார் பட்டுச் சேலையொன்று வாங்கிக் கொள்ள வேண்டும்.

8. திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன், மணமகள் வீட்டார் சுப நாட்களில்,

(அ) மணமகளை அலங்காரம் செய்து கொள்ள வேண்டிய தங்க ஆபரணங்களைச் செய்வித்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) மணமகளை அலங்கரிப்பதற்கு ஒருவரை ஒழுங்கு செய்து அவர் கேட்கும் பொருட்களை (சடைநாகம் மற்றும் அலங்காரப் பொருட்கள், முகத்திரை) பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(இ) மணமேடைக்கு வரும்போது மணமகள் அணிந்து வரும் சேலை, சட்டை, மணமகனின் பெற்றோர் சகோதரர்களுக்கு பட்டு வேட்டி சால்வை / பட்டுப்பிடவை ஆகியவற்றை வாங்கிக் கொள்ள வேண்டும்.

(ஈ) திருமணப் பதிவு நிகழ்வின் போது மணமகனுக்கு அன்பளிக்க பட்டு வேட்டி சால்வை அல்லது காற்சட்டையும் மேற்சட்டையும் அல்லது அவற்றிற்கான பிடவைகளை வாங்கிக் கொள்ள வேண்டும்.

9. திருமண நிகழ்வை படம் பிடிக்கவும் வீடியோ எடுக்கவும் விரும்பினால் சம்பந்த பகுதி இருவரும் பேசி ஒழுங்கு செய்து கொள்ளலாம். இவர்களுக்கு திருமணச் சடங்கிற்கு இடையூறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவிக் காது தமது கடமையைச் செய்யுமாறு பணிப்புரை வழங்க வேண்டும்.

10.

(அ) அழைப்பாளர்களின் எண்ணிக்கைக்குத் தக திருமண விருந்துக்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். சமையல் செய்து தரக் கூடியவர்களை ஒழுங்கு செய்து அவர்களுடன் கலந்து பேசி, தேவையான பாத்திரங்கள், சமைக்குமிடம், நீர் வசதி, வெளிச்ச வசதி, விறகு, அடுப்பு போன்ற ஒழுங்குகளைச் செய்து கொடுக்க வேண்டும். உணவு பரிமாறு தற்கு, வாழையிலை / தட்டங்கள், பந்திபாய் / இருக்கைகள் ஒழுங்கு செய்தல் வேண்டும். உணவு பரிமாறுதற்கான ஆட்கள் யாரென முற்கூட்டியே தீர்மானித் திருத்தல் உதவியாயிருக்கும்.

இக்காலத்தில் இப்பொறுப்புகளை மண்டப நிர்வாகிகளே செய்து தந்து வருகையாளர் எண்ணிக்கைக்கேற்ப பணம் அறவிடுகின்றனர். பரிமாற வேண்டிய உணவு பற்றி முற்கூட்டியே மண்டப நிர்வாகத் துடன் பேசி ஒழுங்கு செய்து கொள்வதும் விருந்தினர் ஒழுங்காகக் கவனிக்கப்படு கிறார்களா என்பதை மேற்பார்வை செய்ய சம்பந்த பகுதியினர் தம்மிற் சிலரை நியமித்துக்கொள்வதும் குறைகள் வராதிருக்க உதவும்.

(ஆ) முகூர்த்த நேரம் தவிர்ந்த ஏனைய சமயங்களில் மணமக்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு பரிமாறப் போதியளவு பலகார வகைகள் (சிப்பி, சீடை, பயற்றம்பணியாரம், சீனி அரியதரம், முறுக்கு) செய்து / செய்வித்து பழுதுபடாமலும் இளகாமலும் சேமித்து வைக்க வேண்டும்.

11. பொன்னுருக்கும், பந்தற்கால் நாட்டும் சடங்கிற்கு சம்பந்தபகுதி இரண்டும் சிறு தொகையான தமது நெருங்கிய உறவினர்களையே அழைப்பர். ஒவ்வோர் பகுதியிலிருந்தும் எத்தனை பேர் வரை பங்குபெறுவர் என்பதை இருபகுதியினரும் முற்கூட்டியே பேசி அறிந்து கொண்டு அவர்களை மணமகன், மணமகள் வீடுகளில் உபசரித்து விருந்து படைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12.**

(அ) திருமணத்திற்கு விருந்தினர் வருகை தரும்போது அவர்களை வரவேற்பவர்கள் யார் யார் என இரு பகுதியினரும் முற்கூட்டியே தீர்மானித்து அவர்கள் அதற்குரிய இடங்களில் நின்று வரவேற்க முன்னொழுங்கு செய்தல் வேண்டும். மணமக்களின் பெற்றோர் அதிகளவு நேரம் மணமேடையில் நிற்க வேண்டியிருக்குமாதலால் அவர்களால் இதனை முற்றாகச் செய்ய முடியாது.

(ஆ) விருந்தினர் அமர்ந்தபின் அவர்களுக்கு இனிப்புப் பண்டமும் (லட்டு அல்லது அதன் வகை) குளிர்பானமும் வழங்கலாம். போதியவளவு இனிப்புப் பண்டமும் குளிர்பானமும் செய்வித்து / கொள்முதல் செய்து வைத்திருத்தல் வேண்டும். சில இடங்களில் மண்டப நிர்வாகிகளே இதனையும் பொறுப்பேற்றுச் செய்து மேலதிக கட்டணம் அறவிடுவர். அவ்வாறாயின் விருந்தினர் ஒழுங்காகக் கவனிக்கப்படுகிறார்களா என்பதை மேற்பார்வை செய்ய சம்பந்த பகுதியினர் தம்மிற் சிலரை நியமித்துக் கொள்வதும் குறைகள் வராதிருக்க உதவும்.

(இ) திருமங்கலநாண் (தாலி) பூட்டியவுடன் விருந்தினருக்குக் கற்கண்டு கொடுக்க வேண்டும். இதற்குப் போதியவளவு கற்கண்டு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். யார் யார் கற்கண்டு கொடுப்பர் என்பதையும் முற்கூட்டியே தீர்மானித்திருத்தல் சீரான நடைமுறையைப் பிரதிபலிக்கும்.

(ஈ) மணமகன் தனது வீட்டிலிருந்து மணமண்டபத்திற்கு புறப் படும்போதும், மணமகன் மணமண்டபத்தை அடையும்போதும், திருமண வைபவ முடிவிலும் தம்பதிகள் மணமகள் வீட்டை யடையும் போதும் பின் மணமகன் வீட்டிற்கு வரும்போதும் யார் யார் ஆரத்தி எடுப்பது என்பதை முற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு.

(உ) மணமேடையில் மணமக்கள் பக்கங்களில் யார் யார் நிற்க வேண்டுமென்பதை முற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு.

(ஊ) சடங்கின் ஒவ்வொரு மங்கல நிகழ்வின் போதும் யார் யார் தேங்காய் உடைப்பது என்பதை முற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு. (தேங்காய் உடைப்பவர் தலைப்பாகை அணிந்திருத்தல் வேண்டும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ) பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற கூறைத்தட்டை எடுத்துச் செல்லும் தம்பதியர் யார் என்பதை முற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு.

(ஏ) திருமங்கல நாண் பூட்டும்போது மணமகள் பின்னால் காமாட்சி விளக்கு பிடிப்பது யார் என்பதைமுற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு.

13. திருமண நிகழ்வு நிறைவுற்றதும் மங்கள வாத்தியம் இசைப்பது முடிவுறும். அது முதல் மெல்லிய வாத்திய இசை ஒலிக்க ஏற்பாடு செய்யலாம். அதற்கு ஒருவர் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

14. வைபவ முடிவில் சிவாச்சாரியருக்கும் அவரது உதவியாளருக்கும் குளிர்பானம் வழங்கியும் மங்கல வாத்தியகாரரை விருந்தில் பங்குபற்ற வைத்தும் வழியனுப்புபவர் யார் யார் என்பதை முற்கூட்டியே தீர்மானித்து வைப்பது சிறப்பு.

15.

(அ) திருமண நிறைவில் மணமக்களை ஆசீர்வதிக்க போதியளவு அறுகரிசி இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) வைபவத்திற்கு விருந்தினர் வருகைதரும் போது அவர்களை வரவேற்கவும் வைபவம் முடிந்து விருந்தினர் மண்டபத்தை விட்டு நீங்கும் போது அவர்களுக்கு நன்றி தெரிவித்து வழியனுப்பவும் மண்டப முகப்பில் மணமக்களின் நெருங்கிய உறவினர்கள் ஒரு சிலராவது நிற்க வேண்டும்.

(இ) விருந்தினர் செல்லும்போது அவர்களுக்கு அன்பளிப்பு யாதாகிலும் வழங்குவதா என்பதைச் சம்பந்த பகுதியினர் இருவரும் முடிவுசெய்து அதை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். வெற்றிலை, பாக்கு,தேசிப்பழம் கொண்ட பை அல்லது சிறு பலகாரப்பொதி அடங்கிய பை அன்பளிப்புப் பொருளாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு : 2**

## பொன்னுருக்கும் வைபவத்திற்கு தேவையான பொருட்கள்:

1. பொற்காசு 1 பவுண்
2. வாசலில் வைக்க நிறைகுட வரவேற்பு வரிசைப் பொருட்கள்
3. பொன்னுருக்குமிடத்தில் குத்துவிளக்கு, குடம், தேங்காய் உடைக்க கத்தி, சருவச்சட்டி
4. மண்சட்டி, உமி, திருகணி
5. தூபக்கால்
6. கர்ப்பூரத் தட்டு
7. தட்டம் - 2
8. ஆசனப் பலகை
9. 3 தேங்காய்
10. 3 சுண்டு அரிசி
11. 10 மாவிலை
12. 3 வாழையிலை
13. பசுவின் சாணி
14. மஞ்சள் அல்லது சாணத்தில் பிடித்த பிள்ளையார் உருவம்
15. அறுகம்புல், பூக்கள்
16. 10 வெற்றிலை
17. 5 பாக்கு
18. ஒரு சீப்பு வாழைப்பழம்
19. 2 தேசிக்காய்
20. மஞ்சள் 50 கிறாம்
21. கர்ப்பூரம்
22. சாம்பிராணி
23. விபூதி
24. சந்தணம்
25. குங்குமம்
26. பட்டு
27. ஆசாரியருக்கு அரிசி, காய்கறி, தெட்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைகுட வரவேற்பு வரிசைப் பொருட்கள்**

நாற்காலியொன்றில் கம்பளம் (மேசை விரிப்பு) விரிக்கப்பட்டு அதன் மேல் வாழையிலையொன்றை வடக்கு அல்லது கிழக்குத் திசையில் அதன் நுனி இருக்கக் கூடியதாக வைத்து அதன் மேல் நெல் பரப்பி அதன் மேல் நிறைகுடம் வைத்து, அதன் இரு மருங்கும் ஒவ்வொரு குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்படும். பசுவின் சாணம் அல்லது மஞ்சள்மாவும் அறுகும் கொண்டு உருவாக்கப்பட்ட விநாயகர் திருவுருவொன்று நிறைகுடத்திற்கு வலது பக்கமாக வைக்கப்படும். விபூதி, சந்தணம், குங்குமம், பன்னீர்ச் செம்பு, வெற்றிலை, பாக்கு, ஒரு சீப்பு வாழைப்பழம் கொண்ட தாம்பாளம், பூத்தட்டம் ஆகியவையும் மங்கல நிகழ்வின் அடையாளமாகவும் பங்கு கொள்ள வருவோரை வரவேற்கும் பாங்கிலும் வைக்கப்படும்.

நிறைகுடம்: நீர் நிரப்பிய குடமொன்றின் வாயிலில் பரவப்பட்ட ஒற்றை இலக்கமுடைய (3,5,7,9,...) மாவிலைகளுள் தும்பு நீக்கப்பட்ட முடியுள்ள தேங்காய் ஒன்றை வைத்து அத்தேங்காயைச் சந்தணம், குங்குமம், பூக்களால் (பூச்சரம் / பூமாலை) அலங்கரித்த அமைப்பு நிறைகுடம் எனப்படும்.

ஆரத்தி : மஞ்சளும் குங்குமமும் பரப்பி நாணயக்குற்றியொன்றும் வைத்த தட்டமொன்றில் நெய் தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலஞ்சுழியாக மூன்று முறை சுற்றித் தீபத்தை அணைத்து வரவேற்கப்படுபவரின் / வரவேற்கப்படுபவர்களின் நெற்றியில் அக்குங்குமத்தால் திலக மிடல் ஆரத்தி எடுத்தல் எனப்படும். தட்டம் பழுதுறாதிருக்க மூன்று வாழைப்பழத் துண்டுகளைத் தட்டில் வைத்து நெய் தீப த்தை அதன் மேல் வைப்பது வழக்கிலுள்ளது. அது அவசியமல்ல.

**இணைப்பு: 3**

---

## மணமக்கள் வீடுகளில் கன்னிக்கால், மரக்கிளை / மரக்கன்று நடுவதற்குத் தேவையான பொருட்கள்:

**பந்தலுக்கு கன்னிக்கால் நடுவதாயின்:**

1. 6 முழ நீள பனை மரமொன்று அல்லது மூங்கில் தடி
2. விபூதி, சந்தணம், குங்குமம்
3. மாவிலை 5
4. பட்டுத்துண்டு 1
5. அலவாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. குத்துவிளக்கு, திரி, எண்ணை, தீப்பெட்டி
7. கர்ப்பூரம்
8. கொடுவாய்க் கத்தி
9. தேங்காய் -1

**மரக்கிளை / மரக்கன்று நடுவதற்கு:**

1. முள்முருங்கைத்தடி / பயன்தரு மரக்கன்று
2. பட்டுத்துண்டு 1
3. குத்துவிளக்கு, திரி, எண்ணை, தீப்பெட்டி
4. விபூதி, சந்தணம், குங்குமம்
5. மாவிலை 5
6. பட்டுத்துண்டு 1
7. தேங்காய் -1
8. நவதானியம் 100 கிறாம்
9. மஞ்சள் மா
10. 1 யார் வெள்ளைத் துணி, செப்பு நாணயக் குற்றி
11. பால் 1/4 போ
12. கர்ப்பூரம்
13. குடத்தில் தண்ணீர்
14. மண்வெட்டி / அலவாங்கு
15. கொடுவாய்க் கத்தி

**மணமகள் வீட்டில் முளைப்பாலிகை இடுவதற்கு தேவையான பொருட்கள்:**

1. மூன்று அல்லது ஐந்து சிறு மண்சட்டிகள்
2. நவதானியம் 100 கிறாம்
3. பால் 1/4 போ
4. கர்ப்பூரம், சாம்பிராணி

**இணைப்பு: 4: மணநாளன்று மணமக்கள் வீடுகளில் அலங்காரம்**

---

1. பழுத்த குலைகளையுடைய ஒரு சோடி வாழை மரங்கள்
2. மாவிலை தோரண அலங்காரம்
3. நுழைவாயிலில் நிறைகுட வரவேற்பு வரிசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராட்டு

1. நிறைகுடம், குத்து விளக்கு, தட்டத்தில் வெற்றிலை, பாக்கு பழம்.
2. ஆசனப்பலகை
3. இரு வெற்றிலையும் நாணயக் குற்றிகள் சிலவும்
4. பால்
5. செம்பு
6. அறுகு
7. உடைக்கத் தேங்காய், கொடுவாய்க்கத்தி, சருவச்சட்டி
8. வருகையாளருக்கு தேநீர், பலகாரம், காலைச் சாப்பாடு
9. மங்கல வாத்திய ஒழுங்கு
10. மணமகனுக்கும் தோழனுக்கும் தலைப்பாகை வைப்பவர்
11. மணமகனுக்கு கழுத்து மாலை
12. வாசலில் ஆரத்தி ஒழுங்கு (வசதி, விருப்புக்குத் தக)
13. மணமகன் மண்டபத்திற்கு செல்ல வாகனம்
14. மணமகனது குலதெய்வத்தின் கோவிலில் உடைக்கத் தேங்கா யொன்றும் கர்ப்பூரமும் தீப்பெட்டியும்.
15. மணமகன் புறப்பட்டதும் மங்கல வாத்தியகாரர் முன்னதாக ஒரு வாகனத்தில் சென்று மண்டப வாயில் வரவேற்புக்கு ஆயத்தமாக மண்டப வாயிலில் நிற்றல்

## மணமகனுடன் மணமண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும் தட்டங்கள்

1. கூறைச்சேலைத் தட்டம்: தட்டமொன்றில் அரிசி பரவி அதன் மேல் கூறைச்சேலை, சட்டை, வெற்றிலை பாக்கு, கஸ்தூரி மஞ்சள், குங்குமம், தேசிக்காய், தேங்காய், ஒரு சீப்பு வாழைப்பழம், பூக்கள், சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசனைப்பூச்சு, தாலி, மஞ்சட்கயிறு அல்லது தாலிக்கொடி அல்லது அவையிரண்டும், ஒரு சோடி மெட்டிஆகியன வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மணமகளின் தோழி இத்தட்டத்தை எடுத்துச் செல்வார்.

2. மேலும் நான்கு தட்டங்களை நான்கு சுமங்கலிப் பெண்கள் எடுத்துச் செல்ல வேண்டும். அவற்றில் பின்வருவன இருக்கும்: தேங்காய், பலகாரங்கள், பூக்கள், பழங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு: 6 : மணநாளன்று கல்யாண மண்டப ஒழுங்குகள்

1. பழுத்த குலைகளையுடைய ஒரு சோடி வாழை மரங்கள் கட்டல்
2. மாவிலை தோரண அலங்காரம்
3. நுழைவாயிலில் நிறைகுட வரவேற்பு வரிசை
4. மணவறையில் விருப்பம் வசதி போல் பூ அலங்காரம்
5. மணமக்களது ஆசனமும் அதற்கு விரிப்புகளும்
6. மங்கல வத்தியகாரருக்கு தனி மேடை
7. வருகையாளரை வரவேற்று அமரவைப்பவர்கள் ஒழுங்கு
8. வருகையாளருக்கு இருக்கைகள் (கதிரைகள்)
9. மணப்பெண்ணின் அறைக்கு தேவையான வசதிகள் (இருக்கைகள், கண்ணாடி)
10. மணமகன் வந்தவுடன் ஆரத்தி எடுக்கும் ஒழுங்கு
11. வருகையாளருக்கு குளிர் பானம், இனிப்புப் பலகாரம் வழங்கும் ஒழுங்கு
12. தேங்காய் உடைக்க ஆள் ஒழுங்கு, தலைப்பாகை
13. தாலி கட்டியவுடன் கொடுக்கக் கற்கண்டு
14. அறுகு அரிசிக்கு மூன்று கொத்து முழு அரிசி, மஞ்சள் மா, அறுகு
15. வருகையாளர்க்கு விருந்து ஒழுங்குகள்
16. வருகையாளர் திரும்பும்போது திருமண ஞாபகார்த்த அன்பளிப்பு

## இணைப்பு : 7 : திருமணக் கிரியைகளுக்குத் தேவையான பொருட்கள்:

1. செம்பு 13
2. குடம் - 2
3. கெண்டி 1
4. அரசாணி குத்துவிளக்கு 4
5. குத்துவிளக்கு - 2
6. அரசாணி குடம் - 4
7. தாம்பாளம் - 5
8. ஆலாத்தித் தட்டம் -1
9. சதுர ஓம குண்டம்
10. அரசாணி பாதம் - 1
11. அம்மி - 1
12. மோதிரம் போட்டெடுக்க பானை
13. சருவச்சட்டி 2
14. மண்சட்டி - 1
15. கொடுவாய்க் கத்தி 1
16. முருக்கந் தடி 1
17. கும்ப வேட்டி 1
18. சிவாச்சாரியார், உதவியாளர் வேட்டி சால்வை
19. அரசாணிக்கு சுற்ற வெள்ளைத்துணி 3 மீற்றர்
20. பட்டுத்துண்டு 5
21. மணமாலை 1 சோடி
22. அரசாணி மாலை 4
23. சரம் - 25 யார்
24. பூ, அறுகு
25. மாவிலை 100
26. வாழையிலை - 15
27. கோசல கோமயம் (பசுவின் சாணமும் சலமும்)
28. பால் - 1/2 லீட்டர்
29. தயிர் - 1/2 பேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. தேங்காய் - 25
31. நெல் 3 படி
32. பச்சையரிசி 1 படி
33. உழுந்து 1/4 கிலோ
34. பயறு 1/4 கிலோ
35. எள்ளு 1/4 கிலோ
36. தேங்காய் எண்ணை 1/2 போ
37. கற்கண்டு -100 கிறாம்
38. சர்க்கரை 100 கிறாம்
39. தேன் - 1/8 போ
40. நெய் - 1/4 போ
41. சமித்து வகை 2 கட்டு
42. நூற்பந்து 1
43. விளக்குத்திரி
44. மஞ்சள் மா 100 கிறாம்
45. அரிசி மா 1 சுண்டு
46. நவதானியம் - 100 கிறாம்
47. நெல்மலர் - 100 கிறாம்
48. கர்ப்பூரம் - 1/4 கிலோ
49. குங்குமம் - 100 கிறாம்
50. பன்னீர் - 1/2 போ
51. சந்தணம் - 100 கிறாம்
52. சாம்பிராணி, சாம்பிராணிக்குச்சி
53. வாழைப்பழம் - 30
54. வெற்றிலை 30
55. சீவல் - 100 கிறாம்
56. தேசிக்காய் - 5
57. 5 தானங்கள் - அரிசி, தேங்காய், காய்பிஞ்சு, தெட்சனை.
58. சில்லறைக்காசு 25 ரூபா
59. சிவாச்சாரியார், உதவியாளருக்கான தெட்சணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவத்திற்கு வருகை தந்து
எம்மை ஆசீர்வதித்தவர்களுக்கு
எமது உளமார்ந்த நன்றிகள்...

**குருபரன் - ஆரணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Harikanan**, *Jaffna.*